விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 | வள்ளுவர் ஆண்டு 2036 | மார்கழி 14 | வியாழக்கிழமை (29.12.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 10

ராம்கோ

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

சீமெந்து







மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் பூதவுடல் விடுதலைப்புலிகளின் அணிவகுப்பு மரியாதையுடன் எடுத்துவரப்படுவதையும், சு.ப.தமிழ்ச்செல்வன் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

# கொந்தளிக்கும் மக்களை அமைதிப்படுத்த இராணுவ வன்முறைகளை நிறுத்த வேண்டும்

## சர்வதேச சமூகத்திற்கு தமிழ்ச்செல்வன் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

**தமிழர் தாயகப் பகுதிகளில் கொந்தளித்துக் கொண்டிருக்கும் தமிழ்மக்களை அமைதிப்படுத்த வேண்டுமாக இருந்தால் அவர்கள் மீது இராணுவம் மேற்கொண்டுள்ள வன்முறைகளை உடனடியாக நிறுத்த வேண்டும்.**

**இதற்கு சர்வதேச சமூகம் இலங்கை அரசிற்கு அழுத்தங்களைக் கொடுக்கவேண்டு மென அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

**மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் அஞ்சலி நிகழ்வில்கலந்துகொண்டுஉரையாற்றும்போதேஅவர் இதனைத் தெரிவித்தார்.** **(12 ஆம் பக்கம் பார்க்க)**

## உடனடியாக பேச்சை ஆரம்பியுங்கள் இரு தரப்பினரிடம் எரிக் வேண்டுகோள்

(ஒஸ்லோ)

யுத்தநிறுத்த ஒப்பந்தம் சீர்குலையும் நிலையில் உள்ளது. அதனைக் காப்பாற்ற இரு தரப்பினரும் உடனடியாக நேரடிப்பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமென நோர்வேயின் சிறப்புத்தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து ஒஸ்லோவில் அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, இலங்கையில் ஒரு மாதத்தில் 80 மேற்பட்டோர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சியில் இந்தியா மேலதிக பங்காற்ற வேண்டும்

### ஜனாதிபதி மகிந்த வேண்டுகோள்

(புதுடில்லி)

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றைய தினம் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

முன்னதாக நேற்றுக்காலை இந்தியக் குடியரசுத் தலைவர் மாளிகையில் ஜனாதிபதி மகிந்தவுக்கு அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. மகாத்மாகாந்தி சமாதியில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய அவர் ,அதன் பின்னர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தனியாகப் பேச்சு நடத்தினார்.

இச் சந்திப்பில் இலங்கையின் சமாதான முயற்சிகளில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் இரு இளைஞர்கள் ஸ்தலத்தில் பலி

### முத்திரைச்சந்தியில் நேற்று மாலை சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பருத்துறை வீதி முத்திரைச்சந்திப் பகுதியில் இரு இளைஞர்கள் இராணுவத்தினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இக்கோரச் சம்பவம் நேற்று மாலை 5மணியளவில் இடம் பெற்றது.

மோட்டார் சைக்கிளில் சென்ற அவர்களின் மீதே துப்பாக்கிச்சூடு இடம்பெற்றது. அவர்கள் இருவரும் மாணவர்கள் எனத்தெரிவிக்கப்பட்டது.

எனினும் அதனை உறுதி செய்ய முடியவில்லை. இதேவேளை சுட்டுக்கொல்லப்பட்டவர்கள் அரியாலையைச் சேர்ந்த லக்ஷனன் (வயது 21) தீபன் (வயது 19) என அடையாளம் காணப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் பயணம்செய்த மோட்டார் சைக்கிள் பொலிஸாரால் எடுத்துச்செல்லப்பட்டது. நேற்றுமாலை சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் சரோஜினி இளங்கோவன் சடலத்தை அடையாளம் காணும் பொருட்டு யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

இராணுத்தரப்புச் செய்திகளின்படி மோட்டார்சைக்கிளில் சென்ற இருவரை தாம் வழி மறித்ததாகவும் அவர்கள் நிறுத்தாது சென்றதினால்அவர்கள்மீதுதுப்பாக்கிப்பிரயோகம்செய்ததாகவும் அவர்களிடம் இருந்து கிரனைட் ஒன்று மீட்டதாகவும் தெரிவித்தனர்.(ச–4–8)

## அமெரிக்கா கவலை

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்கள் குறித்து அமெரிக்கா கவலை வெளியிட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்க அமைச்சரவைப் பேச்சாளர் அடம் எரெலி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு அங்குள்ளவர்களே தீர்வுகாண முடியும். இதற்காக அரசும் விடுதலைப்புலிகளும் அமைதிப்பேச்சுக்களை ஆரம்பித்து எதிர்கால இலங்கையை கட்டியமைக்க வேண்டும் சமாதானப் பேச்சக்களை ஆரம்பிக்க அமெரிக்கா தனது ஆதரவை வழங்குமெனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச–4)

EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021 - 222 3891, 222 6297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1

e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.

எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும்

## கிளைமோர் மீட்பு

(பொன்னாலை)

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் கிளைமோர் குண்டு ஒன்று வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டது.

இதனையடுத்து இராணுவத்தினர் பொதுமக்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டதுடன், பெருமெடுப்பில் சோதனை நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர்.

இதனால் சிலமணி நேரங்கள் போக்குவரத்து தடைப்பட்டது. (கு49)

# கொடூரங்களுக்கு ஏதுவாயிருக்கும் அரசியல் சூழலை சீர்திருத்த உடன் நடவடிக்கைகளை எடுக்குக!

## யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு ஜனாதிபதியிடம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**ஜோசப் பரராஜசிங்கம் எம். பியின் படுகொலையைக் கண்டித்துள்ள யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு, இத்தகைய கொடூரங்களுக்கு ஏதுவாயிருக்கும் அரசியல் சூழலை சீர்திருத்த உடன் நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

இவ் ஆணைக்குழுவின் இயக்குநர் வண.பிதா அ.இ.பேணாட் அடிகளாரின் கையொப்பத்துடன ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரிலேயே இவ் விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

என்றுமே வன்முறையைக் கையாளாது, அமைதியான முறையில் தமிழ்மக்களின் உரிமைகளுக்குக் குரல்கொடுத்து வந்த ஓர் மூத்த அரசியற் தலைவரான ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையைக் கடுமையாகக் கண்டிக்கிறோம்.

கோழைத்தனமான இக் கொடூரம் தமிழ் மக்களின் மனதில் ஆழ்ந்த கவலையையும் பெரும் சீற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, இக் கொலை கிறிஸ்தவ சமூகத்தை அவமதித்து ஆழமாகப் புண்படுத்தியுள்ளது.

அமைதியின் அரசரென்று கிறிஸ்துவரால் மட்டுமல்ல, ஏனைய மத மக்களாலும் வந்தனை செயயபபடும் கிறிஸ்து பெருமானின் பிறப்பு விழா ஆராதனையின்போது அதுவும் ஆலயததினுள்ளே-இப் படுகொலை நடாத்தப்பட்டுள்ளது.

இதற்கேற்ற துரித நடவடிக்கை எடுக்கும்படி தங்களைப் பணிவுடன் கோருகிறோம். அத்துடன் இத தகைய கொடூரங்களுக்கு ஏதுவாயிருக்கும் அரசியல் சூழலை சீர் திருத்தும் முயற்சிகளை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டு மென்றும் தங்களைக் கோரிநிற்கிறோம எனக் குறிப் பிடப்பட்டுள்ளது. (ற)



நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் இந்தியாவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ டெல்லி விமான நிலையத்தை சென்றடைந்த போது இந்திய வெளியுறவு இணை அமைச்சர் அகமது அவரை கைலாகு கொடுத்து வரவேற்றார்.

# இலங்கை அகதிகளுக்கு மானிய விலையில் அரிசி வழங்க இந்திய அரசாங்கம் மறுப்பு

தமிழகத்தில் அகதி முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு மானிய விலையில் தொடர்ந்து அரிசி வழஙக முடியாது என்று இந்திய அரசு மறுத்துள்ளது.

அகதிகளுக்குத் தொடாந்து சலுகை விலையில் அரிசி வழங்க வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்திருந்த போதிலும், இந்திய அரசு தனது முடிவை மறு பரிசீலனை செய்ய மறுத்துவிட்டது. தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளுக்கு மானிய விலையில அரிசி விநியோகிக்கும முறையை கடந்த ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதியுடன் நிறுத்திவிட்டது.

அகதிகளுக்கு மூன்று மாதங்களுக்கு மட்டுமே மானிய விலையில் அரிசி வழங்குவதற்கு விதி முறைகளில் இடம் உணடு. ஆனால் காலவரையறையின்றி அரிசியை வழங்க மத்திய அரசால் ஏதாவது உத்தரவு பிறப்பிக்கப்பட்டதா என்றும் அவ்வாறு இருந்தால் அதை அனுப்பிவைக்குமாறும் தமிழக அரசிடம் கேட்கப்பட்டது.

அப்படிப்பட்ட எந்த உத்தரவையும் தமிழக அரசு காட்டவில்லை. அதேபோல் உள்துறை அமைச்சகத்திலும் அப்படிப்பட்ட எந்தவொரு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டதற்கான ஆதாரம் இல்லை. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் மூலம் இந்திய உணவுக்கழகம் அகதிகளுக்கு மானிய விலையில் அரிசி வழங்குவதும் பின்னர் அந்த அளவை மாநில அரசுக்குக் கொடுப்பதும் நிர்வாக ரீதியாக மிகவும் சிக்கலான காரியம்.

இதற்கான நிதியைப் பொறுத்தவரை செலவு செய்ததற்கான பயனீட்டு சான்றிதழ் மற்றும் கணக்குச் சான்றிதழ்களை வழங்குவதில் தமிழக அரசு தேவையற்ற காலதாமதம் செய்கிறது என்று உள்துறை அமைச்சகம் தெரிவிததுள்ளது.

அகதிகளுக்கு மானிய விலையில் அரிசி வழங்குவதில் உள்ள இதுபோன்ற பல்வேறு சிக்கலகளால், இலங்கை அகதிகளுக்கு வழங்கும் இந்த உதவி ஓகஸ்ட் முதல் நிறுத்தப்பட்டுவிட்டது. எனினும் நியாய விலைக் கடைகளில அவர்கள் பொருட்களை வாங்கிக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அகதிகளுக்கு மானிய விலையில் அரிசி வழங்கும் முறையைத் தொடரவேண்டும் என்று தமிழக முதல்வா ஓகஸ்ட் 23ஆம திகதியே கடிதம் எழுதியிருந்தா. எனினும் இந்திய அரசு தனது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டிய காரணம் எதுவும் இல்லை என்பதால் முதல்வரின் கோரிக்கையை ஏற்கவில்லை என உள்துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது. (ற)

# இராசி பலன்

**29.12.2005**
**(மார்கழி 14 வியாழக்கிழமை)**
**திரயோதசி பிற்பகல் 12.31 மணிவரை**
**அனுசம் முற்பகல் 7.22 மணிவரை**
**இராகுகாலம் 1.58-3.28 மணிவரை**
**சுபநேரம் 7.58-9.28 மணிவரை**
**கெற்போட்ட ஆரம்பம்**

| | |
|---|---|
| மேடம் | காரியதடங்கல், வீண்பிரச்சினை, அபகீர்த்தி, உடல்நலக்குறைவு. |
| இடபம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, தொழில் நன்மை, போசனசுகம், பிரயாணம். |
| மிதுனம் | சுக நிகழ்வு, சத்துருஜெயம், முயற்சி கைகூடும், தொழில் விருத்தி. |
| கடகம் | வியாபார சிந்தை, ஆரோக்கியக்குறைவு, மனச்சஞ்சலம், பணவிரயம். |
| சிங்கம் | மாதாசுகம், ரோகநிலை, கல்வியில் ஆர்வம், சுபசெலவு, |
| கன்னி | சகோதரர் உதவி, பிரயாண நன்மை, காரிய அனுகூலம், விருந்துபசாரம். |
| துலாம் | மனக்கிலேசம், முயற்சி தடங்கல், எதிர்பாராத செலவு, போசனசுகக்குறைவு. |
| விருச்சிகம் | கற்பனை மிகுதி, உறவினர் வருகை, நல்லமுயற்சி, போசனசுகம். |
| தனுசு | காரிய அலைச்சல், சுபசெலவு, உடல் நலக்குறைவு, பிரயாணம். |
| மகரம் | சகோதரர் உதவி, காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, புகழடைதல். |
| கும்பம் | தேகநலன், கடின உழைப்பு, நண்பர்கள் உதவி, போசனசுகம். |
| மீனம் | புதிய முயற்சி, கட்டுப்பாடு, பிதாசிந்தை, சரீரப்பிரயாசை. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
**- வளவன்**

## இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தையே ஒரேவழி-பிரதமர்

(கொழும்பு)

நிபந்தனைகள் இன்றி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கத் தயார் என பிரதமர் ரட்ணசிறிவிக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகளை ஈடுபடச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரசெல்ஸ் மாநாட்டில் இணைத்தலைவர்களுக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இனப்பிரசசினையை தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தை ஆரமபிப்பதே ஒரே வழி என்பதனையும் பிரதமர் ரட்ணசிறிவிக்கிரம நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.(த-9)

## ஆசிரியர்களுக்கு விடுதிகள்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பாடசாலை ஆசிரியர்கள தங்குவதற்கென விடுதிகள் அமைப்பதற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் முன்வந்துள்ளது.

இதற்கென மருதங்கேணி கோட்டத்திலுள்ள ஐந்து பாடசாலைகளுக்கு தலா இரண்டு இலட்சத்து 45ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. செம்பியன்பறறு அ.த.க.பாடசாலை, மருதங்கேணி இ.த.க.பாடசாலை, ஆழியவளை சி.சி.த.க.பாடசாலை, செம்பியன்பற்று றோ.க.வித்தியாலயம் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம் ஆகியவற்றிற்கே இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மருதங்கேணி கோட்டத்திலுள்ள பாடசாலை ஆசிரியர்கள் பெரும்பாலானோர் வடமராட்சியிலிருந்து தினமும் மருதங்கேணிக்கு சென்று வரவேணடியிருப்பதால் இவ்விடுதிகள் அமைக்கப்பட்டால் பெரும் உதவியாக இருக்கும் என ஆசிரியர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (த-35)

## சுனாமியால் பாதிப்புற்ற பாடசாலைகளுக்கு நிரந்தர கட்டடங்கள் அமைக்கப்படவில்லை

(மருதங்கேணி)

மருதங்கேணி கோட்டத்தில் சுனாமியால் பாதிக்கபபட்டு முற்றாகச் சேதமடைந்த பாடசாலைகளுக்கு நிரநதர கட்டடம் அமைக்கும்பணி இது வரை ஆரம்பிக்கப்படவில்லையென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

சுனாமி அனர்த்தங்களால் முற்றாகச் சேதமடைநத பாடசாலைகள் இப்போதும் கொட்டகைகளில எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றி இயங்கி வருகின்றன. பாடசாலை மாணவர்கள் மர நிழலிலும், நிலத்திலிருந்துமே தமது கல்வியை கற்கவேணடிய துர்ப்பாக்கிய நிலையிலுள்ளனர்.

தொண்டர் நிறுவனம் தொடக்கத்தில் விரைவாக இயங்கியபோதும் இப்போது முன்னேற்றகரமான செயற்பாடுகள் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-35)


## வேலை வாய்ப்பு-2005

1.பிரதேச செய்தியாளர்கள்(ஆண்கள்)
2.அலுவலகச் செய்தியாளர்கள்(இருபாலாரும்).
3.விளையாட்டுத்துறைச் செய்தியாளர்கள்(இருபாலாரும்)
4.உதவி ஆசிரியர்கள் (இருபாலாரும்)

கல்வித்தகைமை:-க.பொ.த உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி
குறிப்பு:-பத்திரிகைத்துறை அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
5.பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (இருபாலாரும்)
6.சிற்றூழியர்கள்(இருபாலாரும்)
7.ஒவ்செற் பயிலுநர் (ஆண்கள் மட்டும்)

கல்வித்தகைமை:-க.பொ.த(சாதாரணம்)

விண்ணப்பிக்கும் பதவியுடன் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை,

நிர்வாக உத்தியோகத்தர், வலம்புரி,
இல.3, 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 31.12.2005க்குப் பிந்தாமல் அனுப்பி வைக்கவும்.

நிர்வாக உத்தியோகத்தர்.

## சுனில் தென்னக்கோனுக்கு புதிய பதவி

முன்னாள் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியாகவிருந்த மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் விமான நிலைய மற்றும் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின பிரதித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவப் பேச்சாளராகவும் யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாகவும் பணி புரிந்துள்ள இவர், அண்மையிலேயே இராணுவததிலிருந்து ஓய்வுபெற்றிருந்தார்.

யாழ்.மாவட்ட இராணுவத்தளபதியாக இருந்த இவரை புதிய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா இடமாற்றியதையடுத்து இவர் தனது பதவியிலிருந்து விலகியதும் தற்போது யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சநதிரசிறி நியமிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ற)

## இலவச ஒலிப்பதிவு கலையகம்

(கொழும்பு)

இசைக்கலைஞர்கள் தங்களது பாடல்களை இலவசமாக இசையமைத்து ஒலிப்பதிவு செய்யக்கூடியதான ஒலிப்பதிவு கலையகம் ஒன்று கொழும்பில் எதிர்வரும ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் அமைக்கப்படவுள்ளது.

வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் கலைஞர்களின் படைப்புக்களை உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் கொண்டு செல்வதே இக்கலையக உருவாக்கத்தின் குறிக்கோளாகும். (த-7)


# இராணுவ அராஜகங்களை கண்டித்து சுவிஸ் நாடாளுமன்றத்திற்கு அருகே அமைதி ஒன்றுகூடல்









தமிழா தாயகத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் அட்டூழிய வன்முறைகளைக் கண்டித்து சுவிஸில் நேற்று முன்தினம் அமைதி ஒன்று கூடல் ஒன்று நடத்தப்பட்டது.

புங்குடுதீவில் ஸ்ரீலங்கா கடற்படையினர் 19வயது யுவதியை கொடூரமாக பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்தமையைக் கண்டித்தும், யாழ். பல கலைக்கழக மாணவர் சமூகம் மீதான கண்மூடித்தனமான தாக்குதல்களையும், மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையைக் கண்டித்தும் சுவிஸ் நாடாளுமன்றத்திற்கு அருகே அமைதி முறையிலான ஒன்று கூடல் நடைபெற்றது.

இந்த ஒன்றுகூடலில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு தங்கள் கண்டனத்தை பதிவு செய்தனர்.

பிற்பகல் 2.00மணிக்கு தொடங்கிய இந் நிகழவில் சிறியவர்கள் தொடக்கம் முதியோர்வரை இடைவிடாது கொட்டிகொண்டிருந்த கடும்பனியிலும் இதில் கலந்துகொண்டு தங்கள் கண்டனங்களைத் தெரிவித்தமையை சுவிஸ நாட்டு மக்கள் வியப்புடன் பார்த்துச் சென்றனர்.

தமிழ் இளையோர் அமைப்பு இளைஞர்கள, யுவதிகள் டொச் மொழியில் நடந்தவற்றை விளக்கி தங்கள் கண்டனத்தை தெரிவத்தனர். இதில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் சிறப்புரை நிகழ்த்தினார். அரியநேந்திரனின் சிறப்புரை டொச் மொழியில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டது.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் அடக்கு முறைகளையும், படுகொலைகளையும் கண்டித்து விளக்கும் துண்டுப்பிரசுரங்கள் வீதியில் சென்ற மக்களுக்கு விநியோகிக்கப் பட்டன.

இந்த ஒன்றுகூடலை தமிழ் இளையோர் அமைப்பு, தமிழ்ப்பெண்கள் அமைப்பு, சுவிஸ தமிழர் இல்லங்கள், தமிழ் மாணவர் ஒன்றியம், ஊடகப் பணிமனை ஆகிய அமைப்புகள் ஏற்பாடு செய்திருந்தன. (ற)

# எரிக்குக்கு பதிலாக புதிய சிறப்புத்தூதுவர் நோர்வே வெளியுறவு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான சமாதான சிறப்புத்தூதுவராக புதிதாக ஒருவரை அல்லது சமாதான தூதுக்குழுவை விரைவில் நியமிகவுள்ளதாக நோர்வே வெளியுறவு அமைச்சகம நேற்று முன்தினம் அறிவித்துளளது.

சமாதான சிறப்புத் தூதுவராக புதிய ஒருவர் நியமிக்கப்படவிருக்கின்ற போதும் தொடர்ந்தும் எரிக்சொல்ஹெய்ம சமாதான முயற்சிகளுக்கான தனது பங்களிப்பை தொடர்ந்தும் வழங்குவார் என்றும் நோர்வே வெளிவிவகார அமைச்சின அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நோர்வேயில் பதவியேற்றுள்ள புதிய கூட்டணி அரசாங்கத்தில் சோசலிச இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்த எரிக்சொல்ஹெய்ம் ச்ர்வதேச அபிவிருத்தி அமைச்சராக பொறுப்பு வகிக்கின்றார்.

இந்நிலையில் அமைச்சுப் பணிகளோடு சமாதான முன்னெடுப்பில் அனுசரணையாளராக முன்னரைப்போல் முனைப்போடு செயற்படுவதற்கான சாத்தியப்பாடுகள் குறைவடைந்துள்ளதாக நோர்வே அரசு கருதுவதாகத் தெரியவருகிறது.

நெருக்கடிக்குள்ளாகி முடங்கிப் போயிருக்கும் சமாதான முயற்சிகளை உடனடியாக தொடங்க வேண்டிய அவசியத்தின் அடிப்படையிலேயே நோர்வேயின் இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளதாகக் கூறபடுகின்றது.

இலங்கைத்தீவின் சமாதான முன்னொடுப்புக்களில் முனைப்போடு செயற்பட்டு வரும எரிக்சொல்ஹெய்மை சிங்கள ஆட்சியாளர்களும் இனவாதக் கட்சிகளும் பேரினவாத ஊடகங்களும் தனிப்பட்ட முறையில் கடுமையாக விமர்சித்து வருகின்றன என்பதும் எரிக்சொல்ஹெய்மை வெளியேற்ற வேண்டும் என்பதல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீவிரம காடடியதும் குறிப்பிடததககது. (ற)

# பருத்தித்துறை சம்பவத்தை கண்டித்து அரசு அறிக்கை

(கொழும்பு)

நேற்று முன்தினம் பருத்தித்துறையல் இடம்பெற்ற சம்பவமானது பாரிய போர் நிறுத்த உடன்படிக்கையை மீறிய மிலேச்சத்தனமான செயல் என அரசாங்கம் தெரிவித்துளளது.

அந்த தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதாகவும் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதல் சம்பவத்தில் 12 படையினர் கொல்லப்பட்டதுடன் 3 பேர் காயமடைந்தமை குறித்து அரசாங்கம் விடுத்துள் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுககு ச்ர்வதேச சமூகத்தின் பூரண ஆதரவு கிடைத்து வரும் சந்தர்ப்பத்தில் படையினருக்கு ஆத்திரமூட்டும் முயற்சிகளில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டு வருவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதான செயறபாடுகளை சீர்குலைக்கும் சகல முயற்சிகளையும் தோல்வியடையச் செய்ய வேண்டும்.

ஆததிரமூட்டும் முயற்சிகள் மேற்கொள்ளபபடும் போது படையினர் பொறுமை காப்பது பாராட்டுக்குரியது எனத் தெரிவித்துளள அரசாங்கம் சமாதான செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுக்க சகல இலங்கையரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளது. (த-9)

# கொலைகளைக் கண்டிக்கிறது ஐக்கிய தேசியக் கட்சி

(கொழும்பு)

நாட்டில் தற்போது இடம்பெற்றுவரும் சம்பவங்களின் காரணமாக, பல்வேறு அமைப்புக்களின் மூலம் நாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்கவென ஒன்றிணைந்துள்ள சர்வதேச சமூகம் அதிலிருந்து விலகிச் செல்லும் நிலை உருவாகியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எவ்வித நடவடிக்கையையும் எடுக்காமையே இதற்குக் காரணம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து இடம்பெற்றுவரும் இராணுவத்தினர் மீதான தாக்குதல்கள் உட்பட பொதுமக்கள் மீதான வன்முறைகளையும் ஐக்கிய தேசியக்கட்சி கண்டிப்பதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுக் காலை எதிர்க்கட்சித் தலைவரின அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (த-9)





படுகொலை செய்யப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டுமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் வித்துடலுக்கு தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரன் மலர் மாலை அணிவித்து அகவணக்கம் செலுத்துவதையும், அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் மற்றும் நிதிப் பெறுப்பாளர் தமிழேந்தி ஆகியோர் அஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

# இன்று ஒரு தகவல்

## செல்வம்

ஒரு ஊரில் பெரிய செல்வந்தர் இருந்தார். பணத்திற்கு பஞ்சமில்லை. அதனால் இந்த உலகத்தில் முடியாத காரியம் எதுவுமே இல்லை என்று நினைத்தார். பணம் இருந்தாலே அந்த நினைப்பு தானாக வந்துவிடும். அதனால் இவரும் அப்படி நினைத்ததில் ஒன்றும் தவறில்லை. அந்த ஊருக்கு ஒரு முறை குருநாணக் வந்திருந்தார். அவருக்கு இந்த செல்வந்தர் மிகவும் பிரமாதமாக ஒரு வரவேற்பு அளித்தார். ஊர் எல்லையில் எங்கள் வீட்டுக்கு வந்து விருந்து சாப்பிட்டுவிட்டு போகவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவரும் ஒத்துக்கொண்டார். உடன் தனது பங்களாவில் ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்தார். குருநாணக்கை தனது வீட்டுக்கு அழைத்துச் சென்று உட்கார வைத்தார்.

"ஐயா... நான் இந்த ஊரிலேயே மிகவும் வசதியானவன். என்னால் எல்லாம் முடியும். உங்களுக்காக நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள் எதுவாக இருந்தாலும் பரவாயில்லை. எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை" என்றார் மிகவும் பணிவாக. இதைக் கேட்டதும் குருநாணக் கொஞ்சநேரம் சிந்தித்தார். அதன்பின் தனது சட்டைப்பைக்குள் கையைவிட்டு ஒரு பழைய ஊசியை எடுத்தார். அந்த செல்வந்தரிடம் கொடுத்தார். "இதோ பாருங்கள்... இவ்வளவு தூரம் நீங்கள் கேட்பதனால் சொல்கிறேன். எனக்கு நீங்கள் செய்ய வேண்டிய உதவி இது தான்" என்றார்.

ஊசியைக் கையில் வாங்கிக்கொண்டு "இதை என்ன செய்யவேண்டும் என்று சொல்லுங்கள்" என்றார். "நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால் இந்த ஊசியை கவனமாக வைத்திருக்க வேண்டும். நாம் இருவரும் இறந்த பின்பு இன்னொரு உலகத்தில் நாம் சந்திக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அப்போது இந்த ஊசியை என்னிடம் தாருங்கள் இதுதான் நீங்கள் எனக்காகச் செய்யவேண்டிய உதவி" என்றார் குருநாணக் லேசாக சிரித்துக்கொண்டு. இதைக் கேட்டவுடன் அந்தப் பெரியவர் விழித்தார்.

"அது எப்படி...? நான் சாகும் போது எப்படி இந்த ஊசியை எடுத்துக்கொண்டு இன்னொரு உலகிற்கு வரமுடியும்?" என்றார். "ஊசி போன்றதொரு சிறிய பொருளைக்கூட இந்த உலகத்தைவிட்டு நாம் போகும்போது எடுத்துக்கொண்டு போகமுடியாதபோது.... உங்களுடைய செல்வத்தையெல்லாம் எப்படி அங்கே எடுத்துக்கொண்டு வரப்போகிறீர்கள்? என்று கேட்டார் குருநாணக்.

இதன் பின்னர் தான் அந்தப் பெரியவர் யோசிக்க ஆரம்பித்தார். குருநாணக் சொன்னார். "இதோ பாருங்கள்... நாம் செய்யும் நன்மையும் தீமையும் தான் நம்முடன் கடைசி வரையிலும் இருக்கும். அடுத்தவர்கள் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக பொருளை செலவு செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் எந்தப் பயனும் இல்லை" என்றார். அதன் பின்புதான் அந்த செல்வந்தரின் அறிவுக் கண் திறந்ததாம். உடனே குருநாணக்கை வணங்கினார்.

"ஐயா என்னிடம் இருந்த ஆணவம் போய்விட்டது. இனிமேல் என்னிடமுள்ள செல்வத்தை நல்ல வழியில் செலவழிப்பேன்" என்றார். நம்மிடமுள்ள பணம் எப்போதும் நம்முடன் வந்துகொண்டிருக்காது என்பது இதிலிருந்து புரிகிறது. அதற்காக "நாம் பணம் சேர்ப்பதைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை... பேசாமல் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தால் போதும்" என்று இதற்கு அர்த்தம் கொள்ளக்கூடாது. முறையான வழியில் பணம் சேர்க்க வேண்டும். அதனால் ஏற்படக்கூடிய மன நிறைவிருக்கிறது பாருங்கள் அது அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும்.

சொர்க்கத்திற்குப் போகிறவர்கள் இங்கிருந்து பணத்தை எடுத்துக்கொண்டு போகமுடியாது. ஆனால் நமது செல்வத்தை இங்கே மற்றவர்களுக்கு பயன்படச் செய்து அதனால் ஏற்படும் புண்ணியத்தை எடுத்துக்கொண்டு போகமுடியும். இதுதான் ஆன்மீகவாதிகளின் கூற்று.

யோன் நியூட்டன் என்ற ஒருவர் சொன்னார். " நான் எப்போதாவது சொர்க்கத்திற்குப் போய்ச் சேர்ந்தால் அங்கு மூன்று அதிசயங்களை பார்ப்பேன்" என்றார். "என்ன?" என்று கேட்டேன் நான்..."யார் யார் இருக்கமாட்டார்கள் என்று நினைத்துக்கொண்டிருந்தேனோ அவர்களில் சிலர் அங்கே இருப்பார்கள். அது ஒரு அதிசயம்" என்றார். "சரி... அடுத்தது என்ன?" என்றேன்.

"இரண்டாவது... அங்கே இருப்பார்கள் என்று நான் எதிர்பார்த்த சிலர் அங்கே இருக்கமாட்டார்கள். மூன்றாவது ஆச்சரியம் என்ன தெரியுமா?" என்றார். 'என்ன?' என்று கேட்டேன். "நான் அங்கே இருக்கிறேன் பாருங்கள்... அதுதான் அந்த மூன்றாவது அதிசயம்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

---

### அரச பாடசாலைகளில்

# மாணவர்களின் எண்ணிக்கை குறைவு ஆசிரியர்களின் எண்ணிக்கை உயர்வு

### -கல்வியமைச்சின் அறிக்கையில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அரச பாடசாலைகளில் மாணவர்கள் சேர்வது குறைந்து வருவதாலும் ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும் மாணவ-ஆசிரிய விகிதம் 21 மாணவருக்கு ஒரு ஆசிரியர் என்றளவுக்கு மாறியுள்ளதாக கல்வியமைச்சு கவலையடைந்துள்ளது.

இந்த விகிதம் 2000ஆம் ஆண்டில் 23 மணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்றிருந்தது.

இதேவேளை, 1998 இல் 10,088 பாடசாலைகள் இருந்தன என்றும் 2004இல் 9765 பாடசாலைகளாக அவை குறைவடைந்துள்ளன என்றும் கல்வியமைச்சின் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் இக் காலப்பகுதியில் வடக்கு-கிழக்கில் பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது.

1996 இல் மாணவர்கள் 4,119,627ஆக இருந்தனர். கடந்த ஆண்டில் இத்தொகை 3,870,634 ஆக குறைந்துள்ளது. ஆசிரியர் எண்ணிக்கை கடந்த ஆண்டு 187,338 ஆக இருந்தது. 1998க்கும் 2004றகுமிடையே ஆசிரியர் எண்ணிக்கை ஆயிரத்தினால் உயர்வடைந்திருந்தது. இவ்வருடம் மேலும் 15,000 பட்டதாரி ஆசிரியர்கள் சேவையில் இணைக்கப்பட்டனர்.

மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து செல்வதனால் மாணவர் ஆசிரியர் விகிதம் மேலும் மோசமடையலாம். அதனால் ஆசிரியர்களை உற்பத்திசார் முறையில் ஈடுபடுத்தும் வழிமுறைகள் கண்டறியப்படல் வேண்டும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறுபுறம் ,க.பொ.த.(சா/த) மாணவர்களின் ஆங்கிலப்பாட பெறுபேறுகள் முன்னேற்றம் கண்டுள்ளன. 2002 இல் 27சதவீதமானவர்கள் சித்தியடைந்திருந்தனர். ஆனால் 2004 இல் 47சதவீதமானவர்கள் சித்தியடைந்தனர். கணித பாடத்திலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் பல்கலைக்கழக அனுமதிகளும் 1995இல் 7279 ஆக இருந்த இடத்தில் 2004 இல் 13,167 ஆக ஆகியுள்ளதாகவும் அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-6)

---

# பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிடாமல் அரசு படைகளை வெளியேற்ற வேண்டும்

## சிவநேசன் எம்.பி. வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

அரச பயங்கரவாதத்தை அரசு தவிர்த்துக் கொள்ள வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாரளுமன்ற உறுப்பினர் இ.சிவநேசன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக் கையில்,

யாழ் .குடாநாட்டில் அப்பாவி பொதுமக்கள் மீது தொடர்ந்தும் அரச இராணுவப்படைகள் நடாத்தும் மனித படுகொலைகளையும், மக்கள் மீது நடாத்தும் கண்மூடித்தனமான தாக்குதல்களையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

விடுதலைப் புலிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இல்லாத சூழலில் இனந்தெரியாத நபர்கள் நடாத்துகின்ற இராணுவத்தின் மீதான தாக்குதலுக்காக அப்பாவி பொதுமக்கள் சுட்டுக்கொலை செய்யப்படுவதும், தாக்குதலுக்கு உள்ளாகி பலத்த உடல் தாக்கங்களையும் அனுபவிக்கும் வகையில் துன்புறுத்தப்படுகின்ற நிலைமையும் தொடர்ந்தும் யாழ். குடாநாட்டில் அதிகரித்துச் செல்வது சமாதான சூழலை கேள்விக் குறியாக்கும் என்பதை அரசு உணர்ந்து கொள்ள வேண்டும்.

மக்கள் நடமாடும் பொது இடங்களிலும், வீதிகளிலும் தேவையற்ற விதத்தில் இராணுவத்தை குவித்தும் திட்டமிட்டு குண்டுகளை வெடிக்கச் செய்து மக்களைத் தாக்கி வலிந்து ஒரு போர்ச்சூழலை உருவாக்குவதற்கு, அரசு, அரச படைகளையும் அவர்களுடன் சேர்ந்த ஒட்டுக்குழுக்களையும் பயன்படுத்துவதாகவே கருத வேண்டியுள்ளது.

நேற்று முன்தினம் பருத்தித்துறை வீதியில் இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு உள்ளான இராணுவம், வீதியால் வந்த பொதுமக்களை கொடூரமாகத் தாக்கியதன் விளைவால் மந்திகை பொது வைத்தியசாலையில் தங்கியிருந்த நோயாளர்களும், ஊழியர்களும், வைத்தியர்களும் மிகுந்த அவல நிலைக்குத் தள்ளப்படடுள்ளனர். இவ்வாறான பொறுப்பற்ற செயல்கள் மக்களை ஆத்திரமடையச் செய்கின்றது.

அண்மைக் காலமாக புங்குடுதீவு சம்பவத்தை தொடர்ந்து யாழ்.மாவட்டத்தின் பல பாகங்களிலும் இராணுவத்தால் மேற்கொள்ளப்படும் படுகொலைகளை அரச பயங்கரவாதமாகவே மக்கள் பார்க்கிறார்கள். மக்களைப் பாதுகாக்க வேண்டியவர்கள் மக்களை படுகொலை செய்கிறார்கள். மக்களுக்கு ஆறுதல் அளிக்க வேண்டியவர்கள் அவல நிலையை ஏற்படுத்துகிறார்கள். படைகள் வீதியில், பொதுஇடங்களில் குவிந்திருப்பதால் மக்கள் அச்சத்தோடு தமது தேவைகளுக்காக வெளியில் வரமுடியா துள்ளனர். தொடர்ந்தும் இவ் வாறான அவல வாழ்க்கை நிலை தொடருமேயானால் இராணு வத்திற்கு எதிராக இணைந்து எதிர்க்கின்ற சூழல் மேலும் அதிகரிக்கவே செய் யும்.

இவ்வாறான நிகழ்வுகளை தாயகத்தின் நிலப்பரப்பு எங்கும் இருக்கும் அரச, அரச சார்பற்ற பொது அமைப்புக்கள் அனைத்துமே கண்டிப்பதை பௌத்த இனவாத அரசு கவனத்தில் எடுக்காமல் கண்மூடி மௌனமாக இருக்குமேயானால் இங்கு நடைபெறுகின்ற அனைத்துப் படுகொலைகளுக்கும், துன்புறுத்தல்களுக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் அரசே பொறுப்பேற்க வேண்டும்.

அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடாமல் அரசாங்கம் படைகளை வெளியேற்றி மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்யத் தவறுமேயானால் மக்கள் படையுடன் போராடி தம்மை பாதுகாத்துக் கொள்ளவேண்டிய சூழலும் ஏற்படும் என்பது தவிர்க்கமுடியாததாகிவிடும். இதை ஜனாதிபதியும், அரசும் விரைந்து கவனத்தில் எடுத்து பொருத்தமான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (ற)

---

# இலங்கைக்கு இந்தியா 2 ராடர்களை வழங்கும்

(கொழும்பு)

இலங்கைக்கு 2ராடர்களை வழங்க இந்தியா முடிவு செய்துள்ளதாக இந்திய பாதுகாப்பு அமைச்சக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்திடம் (பெல்) இத்தகைய ராடர்களை உருவாக்க பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது. இந்திரா-02 எனப்படும் இந்த ராடர்கள் இந்திய விமானப் படையிடம் ஒப்படைக்கப்பட்டு பின்னர் இலங்கையிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் அச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தற்போதைய இந்தியப் பயணத்தினூடாக இந்த ராடர்கள் கையளிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. அதேநேரத்தில் இந்த ராடர்கள் மிகச் சிறிய ரக விமானங்களைக் கண்டறியக் கூடியதாக இருக்காது என்றும் கூறப்படுகிறது.

இலங்கைக்கான இராணுவத் தளபாடங்களை வழங்குவதில் பாகிஸ்தான் அக்கறை கொண்டு வருவதையடுத்து இந்தியா இம் முடிவை எடுத்துள்ளதாகவும் இந்தியப் பாதுகாப்பு அமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)



அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி பருத்தித்துறை தலைவர் வழக்கறிஞர் ஆர் . உருத்திராவின் அஞ் சலிக் கூட்டத்திற்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உப தலைவர் ஆர்.ஈ.ஆனந்தராசா தலைமை தாங்கி உரையாற்றுவதையும், தபால் அதிபர் ஜி.திருச்செல்வம் அஞ்சலி உரையாற்றுவதையும், அருகில் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம், சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஏ.பிறேம்சங்கர் ஆகி யோர் இருப்பதையும், யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் பேராசிரியர் என்.ஞானக்குமாரன் அஞ்சலி உரை நிகழ்த்துவதையும் காணலாம் . (படங்கள்:-பரு.நிருபர்)

### இலங்கை பிரச்சினை விடயத்தில்

# அந்நிய சக்திகளின் அழுத்தங்களுக்கு இந்தியா அடிபணிந்துவிடக் கூடாது

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்து

(கோவை)

இலங்கை தமிழர் பிரச்சினையில் மிகுந்த எச்சரிக்கையுடன் இந்தியா தனது வெளி விவகாரக் கொள்கையை வகுக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய செயலாளர் டி.ராஜா வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்நாட்டின் கோவையில் ஊடகவியலாளர்களிடம் டி.ராஜா இது தொடர்பில் கூறுகையில்,

போர் நிறுத்த உடனபாடுகளைக் குலைக்கும் புதிய முயற்சிகள் தொடங்கியுள்ளன. வெளிவிவகார அமைச்சர் கதிர்காமா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோரின் படுகொலை போன்ற நிகழ்வுகளால் மீண்டும் ஆயுதப் போராட்டம் உருவெடுக்கக்கூடும் என்று அச்சம் ஏற்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் மோதல்கள் தொடருமானால் சமரசத்துக்கான முயற்சிகளை அது சீர்குலைத்துவிடும். இந்தச் சூழலில் இலங்கையில் நடக்கும் நிலைமைகளை உன்னிப்பாகக் கவனித்து இந்தியா செயற் படவேண்டும். இந்தியா எடுக்கும் நிலைப்பாடுகள் அதன் சொந்தக் கொள்கைகளாகவோ தன்னிச்சையானதாகவோ இருக்க வேண்டும்.

இதில் அந்நிய சக்திகளின் அழுத்தங்களுக்கும் வற்புறுத்தலுக்கும் இந்தியா ஒருபோதும் அடிபணியக்கூடாது. இலங்கையில் தொடர்ந்து நடக்கும் மோதல்கள் இந்தியாவையும் கடுமையாகப் பாதிக்கும் என்பதைக் கவனத்தில் கொண்டு இந்தியா, தனக்கான கொள்கைகளோடு இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும்.

மாறாக, அந்நிய சக்திகள் இதுவிடயத்தில்செல்வாக்கைச் செலுத்த அனுமதிக்கக்கூடாது என்றார்.

இந்தியாவைத் தங்களுக்குச் சாதகமாகச் செயற்பட வைப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியப் பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், இந்திய மத்திய அரசின் கடிவாளமாகக் கருதப்படுகிற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்தியச் செயலாளர் விடுத்திருக்கும் இவ் எச்சரிக்கை மிக முக்கியமானதாக, ஒரு திருப்பமாகக் கருதப்படுகிறது என்று புதுடில்லி மற்றும் கொழும்பு அரசியல் நோக்கர்களும் கொள்கை வகுப்பாளர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ற)

## நீதிமன்றத்தில் சாராயம் தந்தை வழங்கினர்

(கொழும்பு)

ஆனமடுவ நீதிமன்றத்தில் இருந்த மகனுக்கு பாணில் சாராயத்தை மறைத்து கொடுக்க முற்பட்ட தந்தை ஒருவரை பாதுகாப்புக் கடமையிலிருந்த சிறைக் காவலர்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இவ்வாறு பாணில் சாராயத்தை மறைத்து வழங்க முற்பட்ட தந்தைக்கு எதிராக நீதிமன்றத்தினை அவமதித்த குற்றச்சாட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவர் இவ்வாறு பலதடவை தந்திரமாக சாராயம் வழங்கியமை விசாரணை மூலம் தெரியவந்துள்ளது. (த-2)

## நிரந்தர அனுமதி

(கொழும்பு)

மூன்று தனியார் விமான நிறுவனங்களுக்கு இந்தியாவிற்கான் சேவையை வழங்குவதற்கு நிரந்தரமான அனுமதிப் பத்திரம் வழங்கப்படும் என்று விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம் எம்.எம்.வி.நிமலசிறி தெரிவித்துள்ளார்.

ஆறுமாதகால அவதானிப்பின் பின்னரோ அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். இந்த விடயத்தில் தொழில்நுட்ப ரீதியான விடயத்திலும் பாதுகாப்புச் சம்பந்தமாகவும் கூடிய கவனஞ் செலுத்தப்படும் என்று துறைமுக விமானப் போக்குவரத்து அமைச்சின் மேலதிகச் செயலாளர் சேனவிதானகே தெரிவித்துள்ளார். (த-7)

## பேரழிவுகளை ஏற்படுத்தும் புயலுக்கு பெயரிடுவது எவ்வாறு?

கடலில் பயணம் செய்பவர்கள் கடலின மெல்லிய காற்றை உணரத் தவறுவதில்லை. திடீரென கடலில் ஏற்படும் குறைந்த காற்றழுத்தம் சில காலங்களில் புயல்களாகவும் மாறுவது உண்டு.

எல்லா வகை காற்று வீசுவதற்கும் அடிப்படை வெப்பநிலை தான். ஒரு இடத்தில் காற்று வெப்பமடைந்து லேசாகிறது. அந்த காற்று லேசாகி மேலே செல்கிறது. இதனால் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்ப அருகில் உள்ள குளிர்ந்த காற்று பாய்கிறது.

இதனால் காற்றோட்டம் ஏற்படுகிறது. இதன் வேகம் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. காற்றின் வேகத்தை அளவிட முதன்முதலில் இராணுவ கடற்படை அதிகாரி பிரான்சிஸ் பியூபோர்ட் என்பவர் ஒரு அலகைத் தோற்றுவித்தார்.

அவரது அளவீடுபடி பூஜ்யம் என்பது காற்றின் அசைவற்ற தன்மையைக் குறிக்கும். அளவு 5 என்பது மெல்லிய தென்றல் காற்றைக் குறிக்கும். அளவீடு 8 என்பது சாதாரண புயலைக் குறிக்கும். இது சாதாரண மரத்தின் கிளைகளைக குறிக்கும்.

அளவு 10 என்பது புயலைக் குறிக்கும். புயலின் அளவு 11 முதல் 17 வரை மத்திய பகுதி புயல், இது உலகில் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு வகையாக அழைக்கப்படுகிறது. மேற்கு இந்தியத் தீவுகளில் இந்தப் புயல் ஹரிகேன் என்று அழைக்கப்படுகிறது. அமெரிக்காவில் இது டொர்னடோ என்று அழைக்கப்படுகிறது. சீனாவில் இது டைபூன்கள் என்று அழைக்கப்படுகிறது. ஆஸ்திரேலியாவல் இது வில்லி-வில்லி என்று அழைக்கப்படுகிறது.

இந்தப் புயல்கள் பெரும்பாலும் மக்களுக்குப் புரியும் வகையில் பெண்களின் பெயரிலேயே அழைக்கப்படுகிறது. இரண்டாம் உலகப்போரின் போது மத்திய தரைப் பகுதி புயல்கள் பெரும்பாலும் பெண்கள் பெயரிலேயே அழைக்கப்பட்டது. ஒவ்வொரு புயலும் ஆங்கில எழுத்து அகர வரிசைப படி அமைக்கப்படுகிறது.

ஒரு ஆண்டின் தொடக்கத்தில் ஏற்படும புயல் 'ஏ என்ற ஆங்கில எழுத்தில் தொடங்குகிறது. இரண்டாவது ஏற்படும் புயல் பி என்ற எழுத்தில் தொடங்குகிறது. இது டபிள்யூ எழுத்து வரை தொடர்கிறது. இதில் கியூ மற்றும் யூ எழுத்துக்கள் மட்டும் நீக்கப்பட்டுள்ளது. இந்தப் பெயர்களை டைபூன் குழு உறுப்பினர்கள் தேர்வு செய்கிறார்கள். (த)

## விசேட சலுகை அடிப்படையில் பெற்றோல் கொள்வனவு திட்டம்

(கொழும்பு)

அடுத்தவருடம் தமது நிறுவனத்தின் பிரதான முன்னுரிமைத் திட்டம் விசேட சலுகை அடிப்படையில் பெற்றோலைக் கொள்வனவு செய்வதாகும் என்று பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் தலைவர் ஜாலிய மெத்தகம தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் எண்ணெயின் விலை இன்னும் பாதகமான நிலையிலேயே இருக்கின்றது. ஆனால் ஒரு சாதகமான சூழ்நிலை கூடிய விரைவில் நிலவும் என்று தாம் எண்ணுவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த முயற்சிகள் மக்களின் சிரமத்தைக் குறைப்பதற்காக கூட்டுத்தாபனத்தினரால் மேற்கொள்ளப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

200 கோடி ரூபா செலுத்த வேண்டிய கடனை கூடிய விரைவில் திருப்பிக் கொடுக்க கூட்டுத்தாபனத்தினால் முடியும்.

ஒரு லீற்றர் பெற்றோலை விற்கும் போது கூட்டுத்தாபனத்திற்கு ஒரு ரூபா நஷ்டம் ஏற்படுகிறது.

மேலும், ஒரு லீற்றர் டீசலை விற்கும் போது கூட்டுத்தாபனத்திற்கு 3 ரூபா நஷ்டம் ஏற்படுகிறது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ற-7)

## புலிகளின் பகுதிக்குச் செல்வதற்கு வெளிநாட்டவர்களுக்குத் தடை!

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வெளிநாட்டுப் பிரஜைகள் செல்ல இராணுவத்தினரால் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாடடுப் பகுதிகளுக்கு செல்ல இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் மற்றும் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாடுகளைச் சேர்ந்த தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் புலிகளின் பகுதிக்குள் செல்ல படையினரின் முன்னரங்க காவலரண்களில் கடமையிலுள்ள படையினரால் அனுமதி அளிககப்படுவதில்லை என்றும்,

அவ்வாறு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு செல்ல வேண்டுமானால் இராணுவ தலைமையகத்தின் அனுமதி பெறப்படவேண்டுமென்றும் கூறப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வெளிநாட்டுப் பிரஜைகள் செல்ல வேண்டுமாயின் பாதுகாப்பு அமைச்சிடம் முன் அனுமதி பெற வேணடுமென்று அரசாங்கம் அறிவித்துள்ளதாக பாதுகாப்பு தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றது.

அதேவேளை, வெளிவிவகார அமைச்சு வெளிநாட்டுப் பிரஜைகள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு செல்வோர் குறித்து பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவிக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் மேலும் 16 பொலிஸார் நியமிப்பு

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவில் மேலும் 16 பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சில காலமாக பொலிஸ் திணைக்களம் விடுத்துவந்த வேண்டுகோளுக்கு அமைய இந்த பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

புதிய நியமனங்களுக்கு அமைய ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவில் 97 பொலிஸ் அதிகாரிகள் இடம்பெறுவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 16 பொலிஸ் அதிகாரிகளின் நியமனங்களை உறுதிப்படுத்துவதற்கு பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரம் தேவைப்படுகிறது.

புதிய நியமனங்கள் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவினால் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பதவிக்கு நியமிக்கப்படவுள்ள பொலிஸ் அதிகாரியின் சொத்துக்களை மதிப்பீடு செய்யும் வேலைத்திட்டமொன்றை தேசிய பாதுகாப்பு அமைச்சு அறிமுகப் படுத்தவுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் அற்ற பொலிஸ் சேவையை வழங்குவதற்கு வேலைத் திட்டம் உருவாக்கப்படவுள்ளதாக அந்த அமைச்சின் பொலிஸ் நடவடிக்கை சம்பந்தமான ஆலோசகர் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் பொறுப்பதிகாரி பதவியை ஏற்கும்போது அவர் தனது சொத்துப் பெறுமதியை சமர்ப்பிப்பதோடு உயரதிகாரிகள எவ்வாறான ஒரு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கோரும் போதும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மீண்டும் தனிப்பட்ட சொத்து சம்பந்தமான அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டு புதிய சுற்றுநிருபமொன்றை விரைவில் வெளியிடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-9)

## இத்தாலியின் முன்னாள் பிரதமர் திருகோணமலைக்கு விஜயம்

(திருகோணமலை)

இத்தாலியின் முன்னாள் பிரதமர் தலைமையிலான குழுவினர் நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்துள்ளனர்.

சுனாமிப் பேரலைத் தாக்கத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இத்தாலிய அரசினால் வழங்கப்படும் நிவாரணத் திட்டங்களைப் பார்வையிடும் நேர்க்கில் இந்த விஜயம் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

திருகோணமலையில் அமைக்கப்பட்டு வரும் ஆதரவற்றவர்களுக்கான இல்லத்தையும் பார்வையிட்டுள்ளார்.

நேற்றுக் காலை 10.30 மணிக்கு திருகோணமலை 10 ஆம் குறிச்சியில் அமைக்கப்பட்டுள்ள அண்ணா கடற்றொழிலாளர் சங்கத்தையும் திறந்து வைத்த இத்தாலய முன்னாள் பிரதமர் மீனவர்களுக்கான 40 இலட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்களை வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-9)

## குறைந்த வருமானம் பெறுவோருக்கு வீடமைத்துக் கொடுக்கும் திட்டம்

(கொழும்பு)

வீடு இல்லாத குறைந்த வருமானம் பொறுகின்ற குடும்பங்களுக்கு 200 வீடுகளைக் கட்டிக் கொடுக்க வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இந்த வீடுகளைக் கட்டும் பொழுது உள்ளூர் மூலப் பொருட்களைப் பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அரசாங்கம் இதற்கென 50 ஆயிரம் ரூபா பணத்தையும் கூரைகளுக்கு தேவையான பொருட்களையும் வழங்கும் என்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் பி.வீரகென்றி தெரிவித்துள்ளார்.

கட்டட நிர்மாணப் பணிகள் மூன்று மாதத்துக்குள் நிறைவு பெறும். அமைச்சர் பேரியல் அஷ்ரப் இந்தப் புதிய வீடமைப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார் என்றும் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (த-7)

# தூசிகளால் ஏற்படும் ஒவ்வாமை

வீட்டில் உண்டாகும் தூசியை சுவாசிக்கும் பொழுது சிலருக்கு சுவாசத் தொகுதியுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உண்டாகின்றன. முக்கியமாக தொய்வு, தும்மல், மூக்கிலிருந்து நீர்வடிதல் போன்ற அறிகுறிகள் ஏற்படுவதுண்டு.

இதற்குக் காரணியாக இருப்பது தூசியில் வரும் ஒருவகை நுண்ணங்கி. இது ஆங்கிலத்தில் **'House Dust Mite'** என்று அழைக்கப்படுகின்றது. அதாவது வீட்டுத் தூசி வண்டு.



இதை நுணுக்குக் காட்டி மூலமாக மாத்திரமே பார்க்க முடியும். இது சூடான ஈரலிப்புள்ள சூழலில் வாழும். மனிதனின் தோலிலிருந்து தினமும் கோடிக்கணக்கான இறந்த கலங்கள் அகன்று கொண்டேயிருக்கின்றன. இவை நாம் வசிக்கும் வீடுகளில், படுக்கைகளில், நில விரிப்புகளில், கால் துடைப்புகளில் பரந்து காணப்படும். இப்படியான இறந்த கலங்கள்தான் இந்த நுண்ணங்கிகளின் உணவாகும்.

இந்த நுண்ணங்கியிலிருந்து வெளியேறும் கழிவுகளைச் சுவாசிப்பதால் சிலருக்கு ஒவ்வாமை **(Allergic Reaction)** ஏற்படுகின்றது. ஒவ்வாமை, தொய்வு (அல்லது இழுப்பு) தும்மலாக வெளிப்படுகின்றது. தொய்வு, தும்மல் போன்ற ஒவ்வாமை நோய்கள் இருப்பவர்கள் வீட்டுத் தூசி நுண்ணங்கியை வீட்டிலிருந்து அகற்றவேண்டும்.

இந்த நுண்ணங்கியை வீட்டிலிருந்து முற்றாக அகற்றுவது கடினமாக இருப்பினும், அதன் தொகையைக் குறைப்பதன் மூலம் அதனால் ஏற்படும் தாக்கத்தைக் குறைக்க முடியும்.

நுண்ணங்கியை அகற்றுவதில் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது படுக்கையறை. இங்குதான் வீட்டுத்தூசி நுண்ணங்கி அதிகமான பிரச்சினைகளை உருவாக்குகின்றது. இங்குதான் நாம் ஒருநாளில் மூன்றில் ஒரு பகுதி நேரத்தைக் கழிக்கின்றோம்.

தலையணை, படுக்கை முதலியவற்றை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். இவற்றை பொலித்தீன் உறைகளினால் மூடிவிடுவது சிறந்தது. இப்படிச் செய்வதால் தலையணை, மெத்தையில் உள்ள நுண்ணங்கியின் கழிவுகளைச் சுவாசிக்கும் சந்தர்ப்பம் குறைகின்றது. தினமும் அகன்று கொண்டிருக்கும் தோற்கலங்களும் நுண்ணங்கியை அடையமாட்டாது.

தலையணை உறைகள், படுக்கை விரிப்புக்கள், பாய் முதலியவற்றை அடிக்கடி கழுவவேண்டும். 60°C வெப்பமேற்றிய நீரில் வீட்டுத் தூசி நுண்ணங்கி இறந்துவிடும்.

அடிக்கடி கட்டில், மெதத்தை, பாய் முதலியவற்றை வெயிலில் காயவிடவேண்டும். அறைகளில் ஈரலிப்புத் தன்மையைக் குறைப்பதற்கு யன்னல் கதவுகளைத் திறந்து விட்டு சூரியஒளி கிடைக்கக்கூடியதாக விடவேண்டும்.

குழந்தைகளுக்கு கொடுக்கப்படும் விளையாட்டுப் பொருள்களை அடிக்கடி கழுவி சூரிய ஒளியில் காயவிட வேண்டும்.

நிலவிரிப்புக்கள் **(Carpets Doormats)** அடிக்கடி வெளியே சூரியஒளியில் போடப்பட வேண்டும். கழுவக்கூடியவை கழுவப்பட வேண்டும். வெற்றிடத் துப்பரவாக்கியை **(Vacuum Cleaner)** பாவித்து சுத்தப்படுத்த வேண்டும். தொய்வு போன்ற ஒவ்வாமை நோய்கள் இருப்பவர்கள் வீட்டில் நிலவிரிப்புக்கள் பாவிக்காது இருப்பது நல்லது.

பொதுவாக வீட்டில் தூசி பெருகாது பார்த்துக்கொள்ள வேண்டும். புத்தகங்கள், சிறிய தூசி படியக்கூடிய சாமான்கள், உடைகள் முதலியவற்றை மூடிய அலுமாரிகளில் வைப்பது நல்லது. ஈரத் துணியால் வீட்டுத் தளபாடங்களை அடிக்கடி துடைக்க வேண்டும். வீட்டுக் கதவுகளில் தொங்கும திரைச்சீலைகளை அடிக்கடி துவைக்க வேண்டும். பகலிலே யன்னல் கதவுகளை அகலத் திறந்து வைக்கவேண்டும்.

ஒவ்வாமைக்குக் காரணமாக இருப்பதில்



வீட்டு வளர்ப்புப் பிராணிகளும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இவற்றில் பூனைகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஒவ்வாமையினால் உண்டாகும் தொய்வு போன்ற நோய் உள்ளவர்கள் வீட்டில் பூனை வளர்ப்பதை நிறுத்தவேண்டும். பூனைகளை அப்புறப்படுத்தினாலும் நோய் குறைவதற்கு 6 முதல் 12 மாதங்கள் எடுக்கும் என்பதை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்.

*நன்றி: சுகமஞ்சரி*

**வைத்தியக் கலாநிதி**
**ந. சிவராஜா**

## பயணிகள் சிரமம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் பஸ் நிலையமொன்று இல்லாததால் பொதுச் சந்தை முன் நின்று பயணிகள் பஸ் ஏறவேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது. (த-72)

## இரங்கல் திருப்பலி

(ஊர்காவற்றுறை)

கடந்த 26ஆம் திகதி சுனாமி கடல் அனர்த்தத்தால் பலிகொண்ட மக்களுக்காக தீவகம் வடக்கு புனித மரியாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி நடைபெற்றது. (த-72)

## குஜராத்தில் விபத்து 22 பேர் பலி

மேற்கிந்திய மாநிலமான குஜராத்தில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் 22 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

பயணிகள் பேருந்து ஒன்று இரசாயன கொள்கலன் ஒன்றுடன் நேருக்கு நேராக மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குஜராத்தின் தலைநகரான அகமதாபாத்துக்கும் வர்த்தக தலைநகரான மும்பாய்க்கும் இடையில் பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்தே விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ற-9)

# அரச உத்தியோகத்தர்கள் இடமாற்றம்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாண சபையின் கீழ் இயங்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அடுத்த வருடத்திற்கான வருடாந்த இடமாற்றங்களை மாகாண பொது நிர்வாக அமைச்சு தற்போது மேற்கொண்டு வருகின்றது. எதிர்வரும் ஜனவரி மாதம் 16ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் இந்த இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் பத்மநாதன் தெரிவித்தார்.

ஒரே சேவை நிலையத்தில் தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகள் கடமையாற்றிய உத்தியோகத்தர்கள் புதிய சேவை நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் அவர்களது திணைக்களத் தலைவர்களுக்கும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தாகள் புதிய சேவை நிலையத்திற்கு சென்று கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும்.

உரிய திகதிகளில் கடமைகளை பொறுப்பேற்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

அத்துடன் ஜனவரி மாதம் தொடக்கம் சமபளக் கொடுப்பனவுகளை இடைநிறுத்தி வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் பொதுநிர்வாக அமைசசின் செயலாளர் அறிவித்துள்ளார்.

தற்போதைய இடமாற்றம் தொடர்பாக மேன்முறையீடு செய்ய விரும்பும் உத்தியோகத்தர்கள் விண்ணப்பங்களை திணைக்களத்தின் தலைவர் ஊடாக இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்பாக மாகாண பொதுநிர்வாக அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (த-2)

# இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒற்றையாட்சிக் கொள்கை ஏற்புடையதல்ல

## இந்தியாவின் நிலைப்பாடு இதுவென்று 'தி ஹிந்து' நாளிதழ் சுட்டிக்காட்டு

(புதுடில்லி)

**இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒற்றையாட்சிக் கொள்கை ஏற்புடையதல்ல என்பதை இந்தியா இலங்கைக்கு வலியுறுத்தும் என 'தி ஹிந்து' நாளிதழ் தெரிவித்துள்ளது.**

இந்தியாவின் முக்கிய நாளிதழான 'தி ஹிந்து' நேற்று வெளியிட்டுள்ள செய்தியில்,

தற்போது இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இதனை இந்தியா வலியுறுத்தும் என தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் கொண்டுள்ள ஒற்றையாட்சிக் கொள்கையின் கீழ் ஒருபோதும் தென்னிலங்கை கட்சிகள் மத்தியில் இனப்பிரச்சினைக்கான இணக்கம் ஒன்றை அடைய முடியாது என்பதே இந்திய அரசாங்கத்தின் கொள்கையாகும்.

எனவே, அதனைக் கைவிட்டு இலங்கையின் வடக்கு கிழக்குக்கு அதிக அதிகாரங்களை வழங்கக்கூடிய சமஷ்டி முறைத் தீர்வு குறித்து தீவிரமாக ஆலோசனை செய்யவேண்டும்.

அதன் மூலமே நடைமுறையில் பாரிய பிரச்சினையைத் தோற்றுவித்துள்ள இனமுறுகலுக்குத் தீர்வை எட்டமுடியும். அதுவே தமிழீழ விடுதலைப்புலிகளின் தனிநாட்டு கோரிக்கைக்கு ஈடாக முடியும் என்ற செய்தியை இந்தியா இலங்கையின் ஜனாதிபதிக்கு தெரிவிக்கும் என்றும் தி ஹிந்து நாளிதழ் குறிப்பிட்டுள்ளது. (ற-9)

## கோரிக்கை

(திருகோணமலை)

திருகோணமலையில் தமிழ் முச்சக்கர வண்டிச் சாரதிகளைத் தூர இடங்களுக்கான போக்குவரத்துக்களில் ஈடுபடவேண்டாம் என்று திருகோணமலை தமிழ் முச்சக்கரவண்டி ஓட்டுநர்களின் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

திருகோணமலையில் தற்போது நிலவும் பதற்றமான சூழ்நிலையை கருத்தில் கொண்டே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-9)

# மஹிந்த ராஜபக்ஷவுக்கு மகத்தான வரவேற்பு

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கும் இலங்கைக் குழுவினருக்கு இந்தியாவில் மகத்தான வரவேற்று அளிக்கப்பட்டுள்ளது.

இந்திய ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான 'ராஜ்ரபதி பவானில்' விசேட வரவேற்பு வைபவம் ஒன்று நேற்றுக்காலை இடம்பெற்றது.

இந்த நிகழ்ச்சியில் இந்திய ஜனாதிபதி டாக்டர் அப்துல்கலாம், பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் அமைச்சர்கள், முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதிக்கு இராணுவ அணிவகுப்பு மரியாதையும் வழங்கப்பட்டது.


நேற்றுக்காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மகாத்மா காந்தியின் சிலைக்கு மலர்வலையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு ஜனாதிபதி பதிலளிக்கும் போது, பொருளாதார வர்த்தக முயற்சிகள் பற்றி இந்தியாவில் சம்பந்தப்பட்ட துறையினருடன் தாம் பேசவிருப்பதாகத் தெரிவித்தார். (த-7)

# தேங்காய்க்குள் குழந்தையின் உருவம்

(திருகோணமலை)

திருகோணமலை மட்கோவ் என்ற இடத்தில் வசித்துவரும் முகமது கையூப் என்பவரது வீட்டில் சமையலுக்காக தேங்காய் உடைத்தபோது அதில் ஒரு பாதியில் குழந்தை ஒன்றின் தோற்றம் தென்பட்டுள்ளது.



கடந்த சில நாட்களுக்கு முன் இவ் அதிசயம் இடம்பெற்றுள்ளது.

அச்சில் வடித்ததுபோல தென்படும் இந்தக் குழந்தையின் உருவத்தினைப் பார்ப்பதற்காக பெரும் எண்ணிக்கையான மக்கள் அந்த வீட்டில் கூடியதாகத் தெரியவருகின்றது. (ற)

# முதியோரைக் கௌரவிக்கும் வரிசையில் ஓய்வு பெற்ற வங்கியாளர்கள்

மனித சமுதாயம் தமது வருங்கால சந்ததியினருக்காக எவற்றையெல்லாம் விட்டுச் செல்ல முடியுமோ அவற்றிற்காக அரும்பாடு பட்டு வந்திருக்கின்றது. இந்த மறுக்க முடியாத உண்மையின் பின்புலத்தில் பயன்தரு இனிய கனிதரு மரங்களும், கண்டுபிடிப்புக்களும், கட்டட வளர்ச்சிகளும் சித்திர சிற்ப விற்பன்னர்களின் சாதனைகளும் இந்த உலகை வியக்க வைத்திருக்கின்றது. அந்த வகையில் அவர்களது வரலாற்று உண்மைகளை நாம் வியக்கின்ற போது அவர்களை எளிதில் மறந்திட முடியுமா?

வங்கி வாழ்வும் இதற்கு விதிவிலக்கல்ல என்ற உண்மைய்யை உணர்ந்த யாழ். மாவட்ட சமகால அரச தனியார் வங்கி ஊழியர்கள் வருடந்தோறும் தமது ஓய்வு பெற்ற வங்கியாளர்களைக் கௌரவித்து வருகின்றனர்.

இவ்வகையில் இம்முறையும் இந்நிகழ்வை கடந்த 15.12.2005 திகதி அன்று வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் மக்கள் வங்கி பிரதேச முகாமையாளர் ரி.ரகு தலைமையில் நடாத்தியுள்ளனர்.

பிரதம விருந்தினராக வருகை தந்திருந்த யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் ஆரோக்கிய வாழ்வுக்கு ஒழுக்கம், தூய உணவுப் பழக்க வழக்கங்கள் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தையும், அவ்வாறு வாழ்ந்தவர்கள் விட்டுச் சென்ற பணிக்காக நடைபெறுகின்ற இவ்வாறான நிகழ்வினையும் பாராட்டினார்.

யாழ்.வர்த்தக வங்கியின் முகாமையாளர் எஸ்.ரவீந்திராவும், இலங்கை வங்கி யாழ்.இரண்டாம் கிளை முகாமையாளராகிய ஆர்.சிவராமலிங்கமும் தம் முன்னையவர்களின் அயராத முயற்சிகளையே தற்பொழுது பயன்தரு கனிகளாக தாம் சந்தோஷத்துடன் அனுபவிப்பதாக எடுத்துக் கூறினார்கள்.

செலான் வங்கி முகாமையாளர் கே.கனகசிங்கம் தமது உரையில் ஊழியர்கள் எத்தரத்தினராய் இருந்தாலும் எமது முன்னைய ஓய்வு பெற்ற ஊழியர்களையும் மூத்த குடிமக்களையும் கௌரவிக்க வேண்டும் என்று எடுத்துரைத்தார்.

வங்கியாளர்களின் நலன்புரிச் சங்க கௌரவ செயலாளர் என்.சிவரத்தினம் தனது நன்றி உரையில் சங்கத்தின் ஸ்தாபகர் கே.கணேசமூர்த்தி அவர்களுடைய வாழ்த்துச் செய்தியையும் வெளியிட்டு இருந்தார். அவர் தற்கால போர்ச் சூழலிலும் சமகால வங்கி உத்தியோகத்தரின் இவ்வாறான முயற்சிகளையும் பாராட்டத் தவறவில்லை. மேலும் போர்ச் சூழ்நிலையில் வங்கிகளின் முன்னேற்றத்திற்காகவும் உயர்ச்சிக்காகவும் பல இன்னல்களை அனுபவித்த ஊழியர்களின் சேவை எந்த வங்கி முகாமைத்துவத்தாலும் கருத்திற் கொள்ளப்படவில்லை என்றும் அவர்களுக்கு ஏற்பட்ட பொருள் மற்றும் உடமைச் சேதங்களுககு நஷ்ட ஈடு வழங்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டியிருந்தார். கோபாலகிருஷ்ணனின் வாழ்த்துச் செய்தியும் இடம்பெற்றது.

**எஸ்.நடராஜா**
**இலங்கை வங்கி, யாழ்.மேற்தரக் கிளை.**

## இலங்கை வங்கி கடன்உதவி

(கொழும்பு)

சிறுவியாபார முயற்சிகளுக்குக் கடன் வழங்குவதற்கு இலங்கை வங்கி முன் வந்துள்ளது.

இதற்கான விசேட கடன்திட்டம் அடுத்த மாதத்திலிருந்து அமுல்படுத்தப்படும்.

இந்தத் திட்டத்தின் அடிப்படையில் 20 ஆயிரம் ரூபாவிலிருந்து 2 இலட்சம் ரூபா வரை உடைமைகளை அடமானவாக வைத்துக் கடன் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராம மக்களின் பொருளாதாரத்தரத்தினை உயர்த்தல், சுய தொழில்களை ஊக்குவித்தல், கிராமிய வளங்களை கூடியளவு பயன்படுத்திக் கொள்ளல் என்பன இந்தக் கடன் திட்டத்தின் பிரதானமான நோக்கங்களாகும். (த-7)

## ஒளி விழா

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலய கலை அரங்கில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு ஆலயப் பங்குத் தந்தை அருட்திரு ஜேமிஸ் அடிகள் தலைமையில் 'ஒளிவிழா' நடைபெறவுள்ளது. (த-72)

## அருள் ஒளி வெளிவந்தது

தெல்லிப்பளை, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தால் வெளியிடப்படும் 'அருள் ஒளி' மலரின் மார்கழி மாத இதழ் வெளிவந்துள்ளது. (ற-7)

# மோசடி தொடர்பில் நேரடி விசாரணை

(கொழும்பு)

சுனாமியினால் சேதம் அடைந்த வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகளை நிர்மாணிப்பதில் மோசடிகளில் ஈடுபட்ட அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் தொடர்பில் அரசாங்கம் நேரடி விசாரணைகளை நடாத்தவிருப்பதாகச் சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளை மீண்டும் கட்டியெழுப்பும் பிரிவின் பிரதான நிறைவேற்று அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் மாத்திரம் 34 ஆயிரம் வீடுகளை புதிதாக அமைப்பதற்கு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அம்பாறை, கல்முனைப் பகுதிகளில் காணிகளைப் பெற்றுக்கொள்வதில் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகவும் இதனால் கரையோரத்தில் வசிக்கும் மக்களுக்கு காணிகளைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் தோன்றியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வீடுகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (த-7)

# நினைவஞ்சலிக் கூட்டம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சிகிழக்கில் சுனாமியால் உயிரிழந்தவர்களுக்கான நினைவஞ்சலிக் கூட்டமொன்று கடந்த திங்கட்கிழமை 12.00 மணிக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில், வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், வடமராட்சி கிழக்கிலுள்ள அனைத்து அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ்.மாவட்ட திட்டமிடல் செயலகப் பொறுப்பாளர் பாலையா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் சிறப்புரையினை, யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ்.மாவட்ட திட்டமிடல் செயலகப் பொறுப்பாளர் பாலையா ஆகியோர் ஆற்றினார். (ற-23)

# புலிகளும் அரசும் சமாதான முயற்சியில் முனைப்புக்காட்ட வேண்டும் -அமெ.

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளும், அரசாங்கமும் இலங்கையில் சமாதான முயற்சிகளில் முனைப்புக்காட்ட வேண்டுமென அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

இதன்மூலமே இலங்கையின் எதிர்காலத்தை கட்டியெழுப்ப முடியுமென அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்க செயலகம் இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையில் தற்போது இடம்பெறும் வன்முறைகள், போர் நிறுத்த உடன்பாட்டை பாதிக்கக்கூடும் என அச்சம் வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் அரசாங்கத்துடன் சமதானப் பேச்சுவார்த்தைக்கு முனைப்புக் காட்ட வேண்டுமென்றும் இராஜாங்க செயலகம் மேலும் வலியுறுத்தியுள்ளது. (ற-9)

### பாதுகாப்பு காரணங்களுக்காக

# நூலக கப்பலின் சேவைகள் திடீர் இடைநிறுத்தம்

இரு வாரங்களுக்கு மேலாக கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் நூலக கப்பலான எம்.வீ.டௌலஸ் தனது நூலக சேவையை திடீரென நிறுத்தியுள்ளது.

ஏராளமான மக்கள் தினம்தோறும் சென்று நூல்களைக் கொள்வனவு செய்து வந்த நிலையில், அண்மையில் ஏற்பட்டுள்ள குழப்பகரமான நிலைகாரணமாக திடீரென்று தனது சேவையை நிறுத்திக்கொண்டுள்ளது.

ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தாம் இவ்வாறு செய்துள்ளதாகக் கப்பலின் ஊடக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கப்பலை காலி துறைமுகத்தில் நிறுத்தி வைக்கவருப்பதாகவும் பொதுமக்கள் ஜனவரி 4ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதி வரையும் அங்கு வரவேற்கப்படுவார்களென்றும் அவ்வதிகாரி தெரிவித்துள்ளார். (ற-6)

# பேசாலை அகதி முகாமில் தீ விபத்து நூற்றுக்கணக்கான வீடுகள் சாம்பல்

(மன்னார்)

பேசாலை அகதி முகாமில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது.

இலங்கை மீனவர் கூட்டுறவுக் கழகத்துக்குச் சொந்தமான இடத்தில் அமைக்கப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான தற்காலிக வீடுகள், முகாமில் ஏற்பட்ட இந்த தீ விபத்தில் எரிந்தன.

இதனால் அனைத்து உடைமைகளையும் பறிகொடுத்த மக்கள் வெற்றிமாதா தேவாலயத்தில் அடைக்கலம் புகுந்துள்ளனர். அண்மையில் பேசாலைத் தாக்குதலையடுத்து 100 வீடமைப்புத் திட்டப் பகுதியில் குடியிருந்த மக்கள் தற்போது வெற்றிமாதா ஆலயத்தில் தஞ்சடைந்துள்ளனர்.

மன்னார் பிரதேச செயலகத்தால் இந்த முகாம் பராமரிக்கப்பட்டு வந்தது. தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை இருப்பினும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் தீ வைக்கப்பட்டிருக்கக்கூடும் என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னாரிலிருந்து 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த 216 குடும்பங்களைச் சேர்ந்த 876 பேர் இம் முகாமில் அகதிகளாக உள்ளனர். இவர்களில் பெரும்பான்மையினோர் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்கள். தீ விபத்து நடந்த இடத்தை வெற்றிமாதா ஆலய நிர்வாகிகள் வின்சென்ட் பேட்றிக், எஸ்.சத்யராஜ் ஆகியோர் பார்வையிட்டனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொணடுள்ளனர். (ற)

# வடகிழக்குப் படுகொலைகளை வன்மையாக கண்டிக்கிறோம்

### அகில இலங்கை இந்து மாமன்றம் அறிக்கை

(கொழும்பு)

தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையையும், வடகிழக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் படுகொலைகளையும் அகில இலங்கை இந்துமாமன்றம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பில், இந்துமாமன்றம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில், வடகிழக்கில் இராணுவ நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டிருக்கும் இவ்வேளையில் அங்கு படுகொலைகளும் தொடர்வது மிகவும் கண்டிக்கப்படவேண்டிய விடயங்களாகும்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும். கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் தமிழ்மக்களை பயங்கரவாதிகளாக முத்திரையிட்டு துன்புறுத்தப்படுவதும் நிறுத்தப்படவேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஒரு மதத்தின் சிறப்பான புனித இரவில், வழிபாட்டுத் தலத்தில் கொலை செய்யப்பட்டதை வன்மையாகக் கண்டிப்பதோடு குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு சுத்திர ஆணைக்குழுவொன்றை அமைத்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் இடைத்தங்கல் முகாம்களில் மக்கள்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் கடந்த ஒருவருட காலமாக இடைத் தங்கல் முகாம்களில் வசித்து வருகிறார்கள்.

இவர்களுக்கு நிரந்தர வீடுகள் இதுவரை அமைக்கப்படவல்லை. இதேவேளை, வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் 300க்கு மேற்பட்ட நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளதாகவும், 200 நிரந்தர வீடுகளுக்கான அமைப்புப் பணிகள் முடிவுற்ற நிலையிலுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இடைத்தங்கல் முகாம்களில் வாழும் மக்கள் எந்த அடிப்படைவசதியும் இல்லாமல், பெரும் கஷ்டங்கள் மத்தியில் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (த-35)

புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்


2006இல் 5ந் தரப் புலமைப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களே! உங்கள் நன்மை கருதி 2006 ஜனவரி முதல் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும்

புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்

உங்கள் வலம்புரியில் வெளிவரும்! வாங்கத் தவறாதீர்கள்!


# ஆஸியின் துல்லியமான பந்து வீச்சில் தெ.ஆ சகல விக்கெட்டுக்களையும் இழந்தது!

அவுஸ்திரேலியா சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்கா அணி 3



போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டியின் தென்னாபிரிக்கா அணி அதன் முதலாவது இன்னிங்சில் 311 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா சகல விக்கெட்டுக்களையும் இழந்து 355 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஹீசை 122 ஓட்டங்களையும் பென்டிங் 117 ஓட்டங்களையும் மற்றும் ஹைடன் 65 ஓட்டங்களையும் பென்றனர்.



பந்து வீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக அன்ரூ நெல 4 விக்கெட்டுககளையும் பொலக் 3 மற்றும் நிற்னி 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் தனது முதலாவது இன்னிங்ஸைத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா சகல விக்கெட்டுக்களையும் இழந்து 311 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிப்ஸ் 94 ஓட்டங்களையும், வில்லியர்ஸ் 61 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அவுஸ்திரேலியா சார்பாக பிரட்லீ



சைம்ஸ் தலா 3 விக்கெட்டுக்களை மற்றும் வோர்ன் 2 விக்கெட்டுக்களையும், மெக்ரா,



மெக்கில் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர். தொடர்ந்து முதலாவது இன்னிங்சில் 44 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்த அவுஸ்திரேலியா இரண்டாவது இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிவருகின்றது. இதில் ஆட்டநேர முடிவில் 2 விக்கெட்டுககளை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஹைடன் ஆட்டமிழக்காமல் 45 ஓட்டங்களைப் பெற்றார் பந்துவீச்சில் நெல், பொலக் தலா ஒரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (த-39)

# முதலாவது ஆசியக் கிண்ண மகளிர் கிரிகெட் பாகிஸ்தானில் நேற்று ஆரம்பம்

முதலாவது ஆசியக் கிண்ண மகளிர் கிரிக்கெட் போட்டி நேற்று பாகிஸ்தானில் ஆரம்பமானது. இந்தத் தொடரில் பாகிஸ்தான், இந்தியா, இலங்கை அணிகள் மோதுகின்றன. பங்களாதேஷ் அணியும் முதலில் பங்கேற்பதாக இருந்தது. எனினும் இறுதி நேரத்தில் அந்த அணி விலகிக் கொணடது.

இந்தப் போட்டிகளை கண்டுகளிப்பதற்கு ஆண் ரசிகர்கள் தனித்தனியாக வர முடியாது. குடும்பத்தோடு வந்தால்தான் அனுமதி உண்டு. அனைத்து வீராங்கனைகளும் இஸ்லாமிய ஆடை விதிகளுக்கு உட்பட நீளமான காற்சட்டை, பனியன் அணிந்திருப்பார்கள். குட்டைப் பாவடைக்கு அனுமதியிலலை. இப்படி பல்வேறு கட்டுப்பாடுகளுடன் கடும் பொலிஸ் பாதுகாப்புடன் இந்தப் போட்டிகள் நடைபெறுகின்றன.

ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் 2 லீக் ஆட்டங்களில் விளையாடும். இந்த லீக் ஆட்டங்களின் முடிவில முதல் இரண்டு இடங்களையும் பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகும் போட்டி அட்டவணை.

பாகிஸ்தான் - இலங்கை (42-28), இந்தியா - இலங்கை (டிச.29), இந்தியா - பாகிஸ்தான் (டிச.30), பாகிஸ்தான் - இலங்கை (டிச.31), இந்தியா - இலங்கை (ஜன.01), இந்தியா - பாகிஸ்தான் (ஜன.02), இறுதிப்போட்டி (ஜன.04) (த-39)

## விளையாட்டுச் செய்திகள்



ஆஸியின் மிகப்பெரும் பணக்காரரும் கிரிக்கெட் முன்னேற்றத்துக்காக பாடுபட்டவருமான கெரி பேக்கரின் மறைவுக்கு மெல்போர்ன் ஸ்டேடியத்தில் மௌன அஞ்சலி செலுத்தும் ஆஸி – தென் ஆபிரிக்க கிரிக்கெட் வீரர்கள்.

இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் தொடங்கும் முன் இந்த அஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது.

# இந்தியாவிற்கு எதிரான டெஸ்ட் தொடரில் நடுவரை மாற்றக் கோருகிறது பாக்.

இந்தியா பாகிஸ்தான் இடையே நடைபெறும கடைசி இரண்டு டெஸ்ட் போட்டிகளில் நடுவராக பனியாற்றவுள்ள அவுஸ்திரேலியா நடுவர் டாரல் ஹேயரை மாற்ற வேண்டும என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கோரிக்கை வைத்துள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கொட் சபை சர்வதேச கிரிக்கெட் சபைக்கு விடுத்துள்ள கோரிக்கையில் இது குறித்து கூறியிருப்பதாவது,

சமீபத்தில் இங்கிலாந்துக்கு எதிரான போட்டிகளில் பாகிஸ்தான் ஆடிய பொழுது நடுவர் ஹேயரின் முடிவு சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் பாகிஸ்தானுக்கு எதிராக இருந்தது போலவும் இருந்தது. நடுவரின் இந்த முடிவு பத்திரிகைகளுக்கும் முன்னாள் வீரர்களுக்கும, ரசிகர்களுக்கும அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

எனவே ஹேயரை நடுவராக நியமித்தால் அது பாகிஸ்தான் அணிக்கு பாதிப்பை ஏற்படுத்தும். சர்வதேச கிரிக்கெட் சபை ஹேயருக்குப் பதிலாக வேறொரு நடுவரை நியமக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு சர்வதேச கிரிக்கெட் சபைக்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கோரிக்கை வைத்துள்ளது.

அவுஸ்திரேலிய நடுவரான ஹேயர் பைசலாபாத் மற்றும் கராச்சி டெஸ்களில் நடுவராக பனியாற்றவுள்ளார். (த-39)

# இந்தியாவை வீழ்த்தும் பாகிஸ்தான்

## இம்ரான் கான் போட்டி

பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்யும் இந்திய அணியை பாகிஸ்தான வீழ்த்தும் என பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் இம்ரான் கான் கூறியுள்ளார்.

இது குறித்து பிரபல பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டி ஒன்றில் இம்ரான் கான் கூறியிருப்பதாவது;

இந்திய அணி பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறது. அப்போது மூன்று டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது. இந்தத் தொடரில் பாகிஸ்தான் அணி நிச்சயம் வெற்றி பெறும். தற்போது குளிர் காலம் நிலவுவதால் அது பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக அமையும்.

கடந்த முறை இந்திய அணியின் சுற்றுப் பயணத்தின் போது ஏப்ரல் மாதம் கோடை காலம் நிலவியதால் அது இந்திய அணிக்கு சாதகமாக அமைந்தது.

பாகிஸ்தான் அணியில் இன்சமாம், அக்தா ஜோடி வெற்றி ஜோடியாகும். துறைமுக நகரமான கராச்சியில் சமீபத்தில் இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டி நடைபெற்றது. இதன் மூலம் அங்கு பாதுகாப்பு பணிகள் சிறப்பாகவுள்ளமை புலனாகியது.

எனவே கராச்சியில் இந்திய பாகிஸ்தான் அணிகள் விளையாடுவதில் ஒன்றும் பிரச்சினை இருக்காது. பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தனிநபர் அமைப்பாக உள்ளது. இநதியா ஆஸ்திரேலியா போல ஜனநாயக அமைப்பாக அது மாற்றப்படவேண்டும். (த-39)

# நியூசிலாந்து அணியின் அடம்ஸ் காயம்



நியூசிலாந்து அணியின் அன்ரூ அடம்ஸ் பயிற்சியில் ஈடுபடும் போது வலதுகை உடைவு காரணமாக இலங்கை அணியுடனான ஒருநாள் போட்டித் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

அடம்ஸிற்குப் பதிலாக இடது கை மித வேகப்பந்துவீச்சாளர் ஜேம்ஸ் பிறக்லின் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அடம்ஸ் அண்மையில் நடைபெற்ற அவுஸ்திரேலியாவுக்கு எதிரான செப்பல் - ஹாட்லி கிண்ணத் தொடரில் இடது கை விரலில் ஏற்பட்ட காயம் காரணமாக விளையாடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-39)



மகளிர் கிரிக்கெட் அணிகளின் தலைவர்கள் மிதாலி (இந்தியா), சனா (பாகிஸ்தான்), சசிகலா (இலங்கை) ஆகியோர் நேற்றுமுன்தினம் கராச்சியில் நடந்த நிருபர்கள் சந்திப்பின்போது...

# ஒருநாள் கிரிக்கெட் தொடரின் தந்தை கெரி பேக்கர் காலமானார்

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரை 1977இல் அறிமுகப்படுத்திய ஒருநாள் கிரிக்கெட் தொடரின் தந்தையும் அவுஸ்திரேலியாவின் மிகப்பெரும் பணக்காரருமான கொி பேக்கர் (வயது 68) சிட்னியில் கடந்த செவ்வாய்க்கிழமை காலமானார்.

விளையாட்டுப் போட்டிகளைக் குறிப்பாக கிரிக்கெட்டைத் தொலைக்காட்சியில பிரபல்யப்படுத்தியதற்கு கெரி பேக்கர் முகக்கிய காரணமாக விளங்கினார். இவர் 1970களில் கிரிக்கெட் அமைப்பை ஆரம்பித்து உலகின் சிறந்த வீரர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு உலகத் தொடா போட்டிகளில் அவர்களை விளையாட வைத்தார்.

கிரிக்கெட் உள்ளிட்ட விளையாட்டுககளில் பெரிதும் ஆர்வம் கொண்டு இத்துறைகளின் முன்னேற்றத்திற்கு ஊக்கசக்தியாக விளங்கிய கெரி, பத்திரிகை, புத்தக வெளியீடு, வானொலி, கிரிக்கெட், இணையத்தளம், தொலைக்காட்சி போன்ற துறைகளிலும முடிசூடா மன்னராகவும் திகழ்ந்தார்.

அச்சிடல் ஊடகநிறுவனம் இலத்திரனி



யல் ஊடக நிறுவனம், கேளிக்கை, குதிரைப் பந்தயம், சூதாட்ட விடுதிகளின் உரிமையாளராகவும் இவர் இருந்தார்.

.·.போர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்ட இந்த ஆண்டின் உலகப்பணக்காரர்கள் பட்டியலில் 95 ஆவது இடம்பிடித்த கெரி உடல் நலக்குறைவாக இருந்து வந்தார். புற்றுநோய், சிறுநீரக கோளாரும் இவருக்கு இருநதுள்ளது. இவருக்கு மனைவி, மகன், மகள் உண்டு. (த-39)


# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

## மீள்பார்வை

## சுயசரிதை

3



அவரது உண்மை வாழ்க்கை, அவர் நடந்து வந்த கலையுலக, அரசியல் பாதைகள், கற்றுக்கொண்ட பாடங்கள், அவருடைய சாதனைகள், வேதனைமிக்க அனுபவங்கள் அவரது வெற்றியின் ரகசியங்கள், எதிர்கால சமுதாயத்தினருக்கு, குறிப்பாக நாடக, திரைப் படக் கலைஞர்களுக்குச் சொல்ல விரும்பும் பயன்மிக்க கருத்துக்கள் ஆகியவற்றை அவரது சிந்தனை மூலமே அவரது வார்த்தைகளாலும், உணர்வுகளாலும் வெளிப்படுத்தும் ஒரு சுயசரிதை நூலை உருவாக்க விரும்பி, அவரிடம் அதற்காக அனுமதி கேட்டேன். அவரும் மனமுவந்து அனுமதி தந்தார். இது தொடர்பாக நான்கு வருடங்கள்...பலநாட்கள்... பல மணிநேரங்கள்-அவருக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம், அவருடன் பேசும் வாய்ப்பினைப் பெற்றேன்.

என்னோடு தன் வாழ்க்கை வரலாற்றின் முக்கிய சம்பவங்களை நினைவுகூர்ந்து, மனம் திறந்து பேசினார். அவர் வாழ்க்கைக் குறிப்புகளை பல்வேறு ஆதாரங்களிலிருந்து ஏற்கனவே திரட்டி வைத்திருந்தேன். அதன் அடிப்படையில், நான் பல கேள்விகள் கேட்க, கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதில் தந்து, என்னை மகிழ்ச்சியிலும் ஆச்சரியத்திலும் ஆழ்த்தினார். அவரோடு பேசிக் கொண்டிருந்த போது அவர் பேசியதையெல்லாம் ஒலிநாடாவில் பதிவு செய்து குறிப்புகள் எடுத்துக்கொண்டேன்.



சிவாஜி கணேசன், டி.எஸ். நாராயணஸ்சுவாமி

இந்த முயற்சி நடந்துகொண்டிருந்தபோதே, இதனை ஊக்குவிப்பது போல சென்னை வானொலி நிலையத்தார் நடிகர் திலகத்தின் வரலாற்றை ஒரு ஒலிநாடாவாக்கி வருங்கால சந்ததியினருக்கு ஒரு பொக்கிஷமாக வைக்க முடிவு செய்தனர். அதன்படி 'கேள்வி பதில்' வடிவிலேயே அந்த ஒலிப் பதிவு நிகழ்ந்தது.

அதன் பின்பும் நடிகர் திலகத்துடன் தொடர்ந்து பல நாட்கள் உரையாடினேன். அவர் குடும்பத்தினருடனும், நெருங்கிய நண்பர்களுடனும், கலை உலகப் பெருமக்களுடனும் பேசி பல தகவல்களைச் சேகரித்தேன்.

இந்த முயற்சியின் பலனாகவும், நடிகர் திலகம் அவர்களின் மனம் திறந்த பேட்டிகள் மூலமாகவும் இந்த சுயசரிதை நூல் உருவாகியுள்ளது. நூலில் எழுதிய விஷயங்களில் பல பகுதிகளை, அவரே படித்துப் பார்த்து சரி பார்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் இவ்வுலகில் இருக்கும்போதே அவரது எழுபத்தைந்தாவது பிந்தநாளில் பவளவிழாப் பரிசாக இந்நூலை வெளியிட்டு, அவர் செய்த கலைத்தொண்டுக்கு நன்றி தெரிவிக்க முயற்சி செய்தோம். ஆனால் அந்த விருப்பம் நிறைவேற முடியாமல் போய்விட்டது. இவ்வளவு சீக்கிரம் அவர் நம்மைவிட்டுப் பிரிந்துவிடுவார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.



சிவாஜி கணேசன், கமலாம்மாள்

பல கோடி மக்கள் இதயத்தில் வாழும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு மரணமே கிடையாது. அவர்கள் அன்றும் இன்றும் என்றும் நம்மோடு ஒரு யுகக் கலைஞனாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

இப்போது அவரது சுயசரிதை நூல் தயாராகிவிட்டது. அவர் மறைவுக்குப் பின்வரும், அவரது 75ஆவது பிறந்த நாளன்று இந்த நூலை வெளியிடும் பாக்கியம் பெற்றுள்ளோம். இந்த நூலின் வாசகங்கள் மூலமும், வண்ணப்படங்கள் மூலமும்,அவரை மீண்டும் தரிசிக்கும் பாக்கியம் நமக்கெல்லாம் கிடைத்திருக்கிறது. நடிகர் திலகத்தின் வாழ்க்கையைப் பரிபூரணமாக ஆராய்ந்து நூலாக்கினால், அது பல ஆயிரம் பக்கங்கள் கொண்ட ஒரு மாபெரும் காப்பியமாக இருக்கும்.

ஆனால், சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதில் வல்லவரான சிவாஜிகணேசன் அவர்கள் தன் வாழ்க்கை வரலாற்றைச் சுயபரிசீலனை செய்து, நினைவிற்கு வந்த விஷயங்களை மட்டும் இந்நூலில் தந்துள்ளார்.எல்லோரிடமும் அன்புள்ளம் கொண்ட நடிகர் திலகம் அவர்கள், எப்பொழுதும் யார் மனதையும் புண்படுத்தியோ நிந்தித்தோ பேசியதில்லை.அதே கொள்கையுடன் தான் இந்த சுயசரிதையிலும், தன் கருத்துக்களையும், விமர்சனங் களையும் யாரும் தனிப்பட்ட முறையில் பாதிக்கப்படாமல், அதேசமயம் உண்மையின் பிரதிபலிப் பாகவும் வெளிப்படுத்தியுள்ளார்.இந்நூலில் தன்னுடன் நெருங்கிப் பழகிய ஒரு சில பெயர்களை அவர் குறிப்பிடப்படாமல் இருந்திருக் கலாம். பல முக்கிய சம்பவங்கள் இதில் விட்டுப் போயிருக்கலாம். இவற்றை அவர் மறந்துவிட வில்லை.

தன் வாழ்க்கையில் தன்னைப் பாதித்த சம்பவங்களையும், தன்னைக் கவர்ந்த அல்லது பாதித்த கலைஞர்கள், தலைவர்கள், தனி மனிதர்கள் ஆகியவர்கள் ஒரு சிலரைப் பற்றியும் மட்டும் தான் இந்த சுயசரிதையில் நடிகர் திலகம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

நடிகர் திலகத்தின் விரிவான வரலாற்றுக் காவியம் ஆங்கிலத்திலும், மற்ற மொழிகளிலும் வெளிவர முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இனி வெளிவரும் நூல்களில் அவரோடு கலையுலகிலும், அரசியல் வாழ்விலும், பொது வாழ்விலும் கைகோர்த்து நின்ற பலரின் கருத்துக்களும், அவரது நாடக, சினிமா வாழ்வின் பல்வேறு சுவையான சம்பவங்களும், நாற்பது வருட காலமாக பத்திரிகைகள், வானொலி, தொலைக் காட்சிகள் மூலம் பேசப் பட்ட பல விஷயங்களும் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.


நடிகர் திலகத்தின் இந்த சுயசரிதை நூல் ஒரு ஆரம்பம் தான்.... இது ஒரு முடிவல்ல... சிவாஜி பிரபு சாரிட்டீஸ் டிரஸ்ட் சார்பில் இந்த நூலை வெளியிட, சிவாஜிகணேசன் அவர்கள் புதல்வர்கள் ராம்குமார் அவர்களும், பிரபு அவர்களும், கிரி ஷண்முகம் அவர்களும் ஏனைய குடும்பத்தினரும் எடுத்துக் கொண்ட பெருமுயற்சியைப் பாராட்டி நன்றி கூறுகிறேன். நூலிருந்து பெறப்படும் நிதி ஏழைக் குழந்தைகளின் கல்விப்பணிக்காக செலவிடப்படுவது பாராட்டுதற்குரிய விஷயம்.

நடிகர் திகலத்திற்கு நாம் செய்யும் நன்றிக்கடனின் ஆரம்பமாக அமைந்துள்ளது இந்த சுயசரிதை நூல். இந்த நூலை நடிகர் திலகத்தின் வாழ்க்கையில் அவரோடு இணைபிரியாது வாழ்ந்து, அவருடைய வெற்றிகளுக்கு பின்னணியில் உறுதுணையாக நின்ற அவரது துணைவியார் மதிப்பிற்குரிய கமலாம்மாள் அவர்களுக்கு சமர்ப்பிப்பது ஒரு பெரும் பாக்கியம் என்று கருதுகிறேன்.

மரணமில்லாப் பெருவாழ்வு ஏய்திய நடிகர் திலகம் அவர்கள் இந்நூலின் மூலம் இன்றும் என்றும் நம்மோடு வாழ்ந்துகொண்டிருப்பார் என்று நம்புகிறோம். இந்தச் சிறப்பான பணியில் எனக்கு உறுதுணை புரிந்த அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். இந்த நூலைப்படித்த தங்கள் மனதில் தோன்றும் மேலான கருத்துக்களை எங்களுக்கு எழுதி அனுப்புமாறு பணிவன்போடு வேண்டிக் கொண்டு இந்த அறிமுக உரையை நிறைவு செய்கிறேன்.

*டாக்டர். டி.எஸ்.நாராயணஸ்வாமி*

(தொடரும்)



இராமேஸ்வரம் நரிக்குளி கடற்கரையில் நேற்று முன்தினம் கரையொதுங்கிய ராட்சத திமிங்கலத்தை (உள்படம் யானைத் தந்தம் போன்ற தாடைப்பகுதி) படத்தில் காணலாம்.

# நினைவுக்கேடயம் வழங்கல்


(மருதங்கேணி)

சர்வதேச தொண்டு நிறுவனங்களின் ஆழிப்பேரலை அனர்த்த உதவித் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையின் அவசர கிசிச்சைப்பிரிவு, மகப்பேற்று சிகிச்சை நிலையம் ஆகியவற்றை குறுகிய காலத்திற்குள் புனரமைப்பு செய்து வழங்கியமையைப் பாராட்டி போர்த்துக்கல் சுகாதார நிறுவனத்திற்கும் அதன் இணைப்பாளர் அன்டிரா ரெபெறெறா தம்பதிகளுக்கும் நினைவுக் கேடயம் வழங்கப்பட்டது.

மேற்படி வைத்தியசாலையின் நிலையத் திறப்பு விழாவில் யாழ். மாவட்ட பிரதி சுகாதார பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன் நினைவுக் கேடயத்தை வழங்கிக் கௌரவித்தார். (த-35)







அண்மையில் இணுவில் அறிவாலயத்தில் இடம்பெற்ற உளநல ஆலோசகர் கா.வைத்தீஸ்வரனின் 'நலமாக வாழ 40 வழிகள்' நூல் வெளியட்டு விழாவில் மங்கள விளக்கை யாழ். கூட்டுறவு ஐக்கிய சங்கங்களின் சமாசத் தலைவர் பெ.கனகசபாபதி ஏற்றுகிறார். அருகில் கொக்குவில் இந்துக்கல்லூா ஓய்வுபெற்ற துணை அதிபர் த.தேவராசா மற்றும் அண்ணா தொழிலக தொழிலதிபர் பொ.நடராசா ஆகியோர் நிற்பதை முதலாவது படத்திலும், யாழ். பல்கலைக்கழக முதுநிலை நூலகர் திருமதி ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் நூல் விமர்சனம் நகழ்த்துவதையும், நூலாசிரியர் கா.வைத்தீஸ்வரனிடமிருந்து பிரபல வர்த்தகர் நா.சுந்தரலிங்கம் முதல் பிரதியை பெற்றுக்கொள்வதையும் காணலாம்.

# அமெ.படைகள் மீது தாக்குதல் நடத்த 200 தற்கொலைப்படை வீரர்கள் தயார்

## -தலிபான் தலைவர் முல்லா

(காபூல்)

அமெரிக்கா மீதும், ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்கப் படைகள் மீதும் தற்கொலைப் படைத்தாக்குதல் நடந்த 200பேர் தயார் நிலையில் உள்ளதாக தலிபான் தலைவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் உலக வர்த்தக மையம் மீது கடந்த 2001ஆம் ஆண்டு பின்லேடனின் அல்கெய்டா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி உலகையே அதிர்ச்சிகுள்ளாக்கினார்கள். பின்லேடனுகசு அடைக்கலம் கொடுத்த ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கப்படை தாக்குதல் நடத்தி அங்கு தலிபான் ஆட்சியை அகறறியது.

இப்போது அங்கு அமீது கர்சாய் தலைமையில் புதிய ஆட்சி நடைபெற்று வருகிறது. அங்கு மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்புப் பணிகளில் அமெரிக்கப்படை ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அமெரிக்கப் படைகளுக்கு எதிராக தலிபான் தீவிரவாதிகள் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில், தலிபான் தலைவர்களில் ஒருவரான முல்லா டாடுல்லா அமெரிக்காவுக்கு எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் முல்லா டாடுல்லா மேலும் குறிப்பிடுகையில்,

2001ஆம் ஆண்டு நடந்த தாக்குதல் போல் அமெரிக்காவில் ஒரு தாக்குதலை நடத்தவும் ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்கப் படைகள் மீது தாக்குதலை நடத்தவும் தலிபான் தற்கொலைப் படை வீரர்கள் தயார் நிலையில் உள்ளனர். இதற்காக 200பேர் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்திருக்கிறார்கள்.

அமெரிக்காவும் அதன் கூட்டணிப் படைகளும் உடனடியாக வாபஸ் பெறப்படவேண்டும். அவர்களுக்கு உதவிசெய்யும் அதிபர் கர்சாய்க்கும் நாங்கள் தண்டனை அளிப்போம் என்று தெரிவித்துள்ளார்.

ஆனால் ஆப்கானிஸ்தான் அரச அதிகாரி ஒருவர் இவ் அறிவிப்புக் குறித்து கருத்துத் தெரிவிக்கையில,

தலிபான் படை மிகவும் பலவீனமடைந்துவிட்டது. இதுவெறும் மிரட்டல். இதற்கு நாங்கள் பயப்படமாட்டோம் என்று கூறியுள்ளார். (ற)



இஸ்ரேல் பலஸ்தீனம் இடையே உள்ள வடக்கு காஸா பகுதியில் உள்ள கவர்னர் அலுவலகக் கட்டடத்தை பலஸ்தீன தீவிரவாதிகள் கைப்பற்றியுள்ளனர். கையில் இயந்திரத் துப்பாக்கிகளுடன் முக மூடி அணிந்த தீவிரவாதிகள் காவலில் உள்ளனர்.



ஆர்மினியா தலைநகர் யெரவனில் உள்ள குடியரசு சதுக்கத்தில் அலங்கரிக்கப்பட்ட புத்தாண்டு மரம் விளக்கொளியில் ஜொலிக்கிறது.

WORLD NEWS உலக தரிசனம்

# 6 தீவிரவாதிகளுக்கு மரணதண்டனை

அல்கெய்டா தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய ஆறு தீவிரவாதிகளுக்கு குவைத் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

ஒசாமா பின்லேடன் தலைமையிலான அல்கெய்டா அமைப்பினருடன் தொடர்புடைய 37 தீவிரவாதிகள் குவைத் அரசால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இவர்கள் மீது பல்வேறு தீவிரவாத செயல்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இவர்களில் 25பேர் குவைத்தைச் சேர்நதவர்கள் அரேபிய நாடுகளை சேர்ந்தவர்கள் ஏழுபேர், ஜோர்டானை சேர்ந்தவர்கள் இரண்டு பேர், சவுதி அவுஸ்திரேலியா மற்றும் சோமாலியா நாடுகளை சோந்த தலா ஒருவர். இது குறித்த வழக்கு குவைத் நீதிமன்றில் நடந்துவந்தது. இந்த வழக்கின் தீர்ப்பு நேற்று முன்தினம் வழுங்கப்பட்டது. குற்றம்சாட்டப்பட்டவர்களில ஆறு பேருக்கு மரணதண்டனை விதிக்கபட்டது. மற்றைய குற்றவாளிகளுக்கு நான்கு மாதத்திலிருந்து 15ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. குற்றச்சாட்டப்பட்டவர்களில் சிலர் அமெரிககப்படைகளுக்கு எதிராக தற்கொலைப படைத்தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்ததை ஒப்புக்கொண்டனர் என பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# ஆஜர் பைஜானில் விமான விபத்து 23 பேர் உடல் சிதறிப் பலி


(பாகு)

ஆஜர் பைஜான் நாட்டில் விமானம் விபத்துக்குள்ளாகி விழுந்ததில் அதிலிருந்த 23பேரும் உடல் சிதறிப் பலியாகியுள்ளனர்.

ரஷ்யாவில் இருந்து பிரிந்து சென்ற நாடுகளில் ஒன்று ஆஜர் பைஜான், இந்த் நாடடு அரசுக்குச் சொந்தமான விமானம் ஒன்று நேறறு முன்தினம் அங்குள்ள பாகு நகரில் இருந்து கஜகஸ்தான் நாட்டில் உள்ள அக்து நகருக்கு புறப்பட்டுச்சென்றது.

இந்த விமானத்தில் 18பயணிகள் மற்றும் விமான ஊழியர்கள் 5பேரும் இருந்தனர். விமானம் புறப்பட்ட 8ஆவது நிமிடத்தில் விமான நிலையத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது. சில வினாடிகளில் விமானம் தரையில் விழுந்து நொருங்கியது. அதில் இருந்த 23 பேரும் உயிரிழந்தனர்.

விமானத்தில் உடைந்த பாகங்கள் கண்டெடுக்கப்பட்டன. பலியானவர்களின உடல்கள் ஆங்காங்கே சிதறிக்கிடந்தன. விமானம் விபத்திக்குள்ளானது ஏன்? என் பது பற்றித் தெரியவில்லை. இந்த விமானம் அன்டோனவ் அன்-140 என்ற ரகத்தைச் சேர்ந்தது. 2 என்ஜின்கள் இதில் உணடு. 2 வருடத்துக்கு முன்புதான் இந்த விமானத்தை ஆஜர் பைஜான் உக்ரைன் நாட்டில் இருந்து வாங்கியது. (ற)



நேபாளத்தில் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் யானைகளுக்கான ஓட்டப் பந்தயப் போட்டி சித்வான் என்ற இடத்தில் நேற்று முன்தினம் நடந்தது. வெற்றி இலக்கைத் தொட போட்டி போட்டு ஓடிய யானைகள்...



ஜெர்மனியில் கடும் பனி கொட்டுகிறது. வடக்கு ஜெர்மனியில் பால்டிக் கடலில் கடலுக்கு மேலாக அமைக்கப்பட்டுள்ள பாலத்தில் வெள்ளைப் போர்வை விரித்ததுபோல் பனி படர்ந்துள்ளது. அதில் நடந்து சென்று இயற்கையை ரசிக்கின்றனர் சுற்றுலாப் பயணிகள்.

# ஈராக்கில் பிணக்குவியல் கண்டுபிடிப்பு சதாம் ஆட்சியில் கொல்லப்பட்டவர்களா?

(கர்பாலா)

ஈராககில் சதாம் உசேன் ஆட்சிக்காலத்தில் இராணுவத்தால் கொல்லப்பட்டு நுற்றுக்கணக்கானோர் ஒரே இடத்தில் புதைக்கப்பட்ட கல்லறைக்குழி நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்படடது.

1991இல் வளைகுடாப் போரை எதிர்த்து ஈராக்கில் வாழும் ஷியா இனமக்கள் சதாம் உசேன் ஆட்சிக்கு எதிரான புரட்சியில் ஈடுபட்டனர். அப்போது சதாம் உசேனின் இராணுவம் சுமார் 30,000ஷியா முஸ்லிம்களைக் கொன்று குவித்தது. அவர்களில் பலர் ஒரே குழியில் புதைக்கப்பட்டனர்.

2003இல் சதாம் உசேன் ஆட்சி வீழ்ந்த பிறகு இந்தக் கல்லறைகள் ஒவ்வொன்றாகக் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. தெற்கு ஈராக்கில் ஷியா இன மக்களும் வடக்கு ஈராக்கில் குர்திஷ் இன மக்களும் இவ்வாறு கொன்று புதைக்கப்பட்டுள்ளனர்.

புனித நகரமான கர்பாலாவில் நேற்று முன்தினம் குடிநீர் குழாய் பதிப்பதற்காகக் குழி தோண்டப்பட்டது. அப்போது ஒரு இடததில் ஏராளமான சடலங்கள புதைகப்பட்டிருந்ததை தொழிலாளி ஒருவர் கண்டுபிடித்தார்.

உடனடியாக பொலிஸார் வரவழைக்கப்பட்டு அந்த இடம் சுற்றிவளைக்கப்பட்டது. டாக்டர்கள் வந்து உடல்களை பார்த்தபோது அவை ஆண், பெண் மற்றும குழந்தைகளின் உடல்கள் என அவர்கள் அணிந்திருந்த ஆடைகளை வைத்து கண்டுபிடிக்கப்பட்டது.

தற்போது சதாம் உசேன் மற்றும் அவரது ஆட்சியில் இடம்பெற்ற 7பேர் மீது 1982இல் துஜைல நகரில் 148பேரைக் கொன்றது தொடர்பாக விசாரணை நடந்து வருகிறது. இந்தக் குற்றச்சாட்டை சதாம் உட்பட 7பேரும் மறுத்துவருகிறார்கள்.(ற)

> சிலர் தன்னிடம் உதவிபெற்றவர்களை தன் கடனாளிகளாகக் கருதுகிறார்கள். தாம் செய்துள்ள உபகாரத்தை அவர்கள் மறப்பதே இல்லை!
> - மார்க்கஸ்

# வலம்புரி

## ஜனாதிபதி மகிந்தவின் காலத்தில் இந்திய ஆதிக்கம் மேலோங்கும்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தால் அமெரிக்காவின் தலையீடு அதிகரிக்கும் என்ற ஆரூடம் ஏற்கனவே அரசியல் களத்தில் பரவலாகப் பேசப்பட்டு இருந்தது.

இவ்விதம் பேசப்படுவதற்கு ரணில் விக்கிரம பிரதமராக இருந்த காலத்தில் அமெரிக்காவு ன் வைத்துக்கொண்ட உறவுகள் காரணமாகின.

எனினும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தோல்விகண்டதன் காரணமாக "அமெரிக்கத் தலையீடு" என்ற பேச்சு செயலிழந்துபோனது.

இப்போது ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள மகிந்த ராஜபக்ஷவின் போக்கு எவ்வாறு இருக்குமென்பது அரசியலில் அலசப்படுகின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவர். 24 வயதில் பாராளுமன்றத்திற்குச் சென்றவர். அவருக்கு இப்போது 60 வயது எனில் அரசியல் அனுபவத்திற்கு 36 வருட பாராளுமன்ற அனுபவம் உண்டு. இந்த விடயங்களை அவர் தனது பதவியேற்பிற்குப் பின்னரான உரையில் விரிவாகக் குறிப்பிட்டிருந்தார்.

ஏற்கனவே நன்கு திட்டமிட்டிருந்த மகிந்தவின் பதவியேற்பு உரை முன்னைய ஜனாதிபதிகளின் உரைகளைவிட நிதானமானதும் தெளிவானதும் என்பதை இங்கு குறிப்பிடாக வேண்டும்.

தனது நடுத்தரக் குடும்பத்தின் பின்னணியை அரசியலுடன் தொடுத்த மகிந்த, ஏழ்மைபற்றி தனக்கு நன்கு தெரியுமெனக் குறிப்பிட்டமை தேர்தல் பிரசாரத்துக்குப் பிந்திய பிரசாரமாக இருந்தது.

அத்துடன் நான் ஓர் ஆசியன். ஆசியாவின் வளர்ச்சிக்கு எனது ஒத்துழைப்பு என்றும் இருக்கும் என்றும் மகிந்த தனது உரையில் கூறியிருந்தார். இவ்வாறு கூறியதன் மூலம் இந்தியாவை நோக்கிய சரிவு அவரிடம் இருப்பதை ஊகித்துக்கொள்ளமுடியும்.

இந்தியாவை துணைக்கு அழைத்துக் கொள்வதன்மூலம் ஈழத்தமிழ் மக்களின் போராட்டத்தை நசுக்கமுடியுமென அவர் எண்ணுகின்றார். அத்துடன் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையில் நோர்வே அனுசரணையாளராகச் செயற்படுவதில் மகிந்தவுக்கும் ஜே.வி.பிக்கும் உடன்பாடில்லை.

எனவே அனுசரணையாளரான நோர்வேயை விலக்குவதற்கு இந்தியாவைக் கொண்டுவரும் தேவையுண்டு. அதற்காகவும் இந்தியாவை ஆசுவாசப்படுத்துவதில் ஜனாதிபதி மகிந்த ஆர்வமாக இருக்கின்றார்.

ஜே.ஆர்.ஜெயவர்தனவின் நரித்தந்திரமும், ஆர்.பிரேமதாசாவின் செயற்பாடும் ஒன்றிணைந்த பாத்திரமாக வர்ணிக்கப்படும் மகிந்த இந்தியாவை வரவழைத்து சமாதானப் முயற்சிகளை ஸ்தம்பிக்க வைக்கும் காய்நகர்த்தலில் ஈடுபட்டுள்ளார்.

இதற்கு இந்தியாவும் தாளம்போடும் என்பதால் மகிந்தவின் காலத்தில் இந்திய ஆதிக்கம் இலங்கையில் ஓங்கவே செய்யும்.

# ஐரோப்பாவில் சமாதானப் பேச்சுக்களை நடத்துவது குறித்து பரிசீலிக்கமாட்டோம்

## -ஊடகத்துறை அமைச்சர்

(கொழும்பு)

ஐரோப்பாவில் இலங்கை யுத்த நிறுத்த ஒப்பந்த அமுலாக்கப் பேச்சுக்களை நடத்துவது தொடர்பாக நாம் நிச்சயமாக பரிசீலிக்கமாட்டோம் என்று அரசாங்கம் மீண்டும் அறிவித்துள்ளது.

ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா இதுதொடர்பாக தெரிவிக்கையில்,

அமைதிப் பேச்சுக்களை இலங்கையில் நடத்தவேண்டும் என்பதுதான் எமது நிலைப்பாடு. இதில் ஒரு நெகிழ்வுத் தன்மையாக மாற்று யோசனையாக ஆசிய நாடு ஒன்றில் பேச்சுக்களை நடத்தலாம் என்று நாம் கூறியுள்ளோம்.

நிச்சயமாக ஐரோப்பிய நாடுகள் ஒன்றின் தலைநகரில இநதப் பேச்சுக்களை நடத்துவது தொடர்பாக நாம் பரிசீலிக்க மாட்டோம்.

இந்த நிலைப்பாட்டில் எமது அரசாங்கம் உறுதியாக இருக்கிறது. அமைதிப் பேச்சுக்களை முன்னெடுக்க எமது தேசிய அமைதிச் செயலகம் தயாராக இருக்கிறது என்றாா.

ஒஸலோவில் தான் முதல் கட்ட அமைதிப் பேச்சுக்கள் தொடங்கப்படவேண்டும் என்பதையும் அதன் பின்னர் ஆசிய நாடு அல்லது ஜப்பானில் பேச்சுக்களை நடத்துவதை விடுதலைப் புலிகள் வரவேற்பதாகவும் இணைத் தலைமை நாடுகளுடன்னான அண்மைய சந்திப்பின் போது விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கடும் போக்காளர் ஐரோப்பிய நாடுகளில் விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய வேண்டும் என்று வலியுறுத்தி வருவதால் தான் ஒஸ்லோவில் முதல் கட்டப் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும் என்பதில் விடுதலைப்புலிகள் உறுதியாக இருப்பதாகவும் சம்பந்தன் கூறியுள்ளார்.

பேச்சுக்கான இடம்தொடர்பாக காலத்தை இழுத்தடிக்காமல் அரசாங்கம் உடனடிப் பேச்சுக்களை தொடங்க முன்வர வேண்டும் என்றும் சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார். (ர)

# இலங்கை அரசு மீது சர்வதேசத் தடை விதிக்க 15 அமெரிக்க தமிழ் அமைப்புகள் வேண்டுகோள்!

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் உள்ளிட்ட தமிழர்களின் திட்டமிட்ட படுகொலைகளை உடனே முடிவுக்குக் கொண்டு வரும் வகையில், ஸ்ரீலங்கா அரசாங்கம் மீது சர்வதேசத் தடை விதிக்க வேண்டும். அமெரிக்காவின் 15 தமிழர் அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

அந்த அமைப்புக்கள் விடுத்துள்ள கூட்டறிக்கையில்,

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரும் மனித உரிமைச செயற்பாட்டாளருமான ஜோசப் பரராஜசிங்கத்தின் கொடூரப படுகொலை தொடர்பில் அமெரிக்க தமிழர் அமைப்புகளாகிய நாங்கள் கோபமும் ஆழ்ந்த வருத்தமும் அடைகிறோம்.:,

ஸ்ரீலங்கா இராணுவக் கட்டுப்பாட்டில் அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள மட்டக்களப்பு நகரின் தேவாலயத்தில் நத்தார் ஆராதனையின் போது நள்ளிரவில் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டது எமக்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பு ஆயர் கிங்ஸ்லி சுவாமிப்பிள்ளையிடம் திருப்பலி பெற்றுக்கொண்டு திரும்புகையில் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுப படுகொலை செய்யப்பட்டுள்ளார். அவரது துணைவியார் சுகுணம் பரராஜசிங்கமும் இந்தத் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் உளளார். குழந்தைகள் உள்ளிட்ட 7 பேர் இந்த காட்டுமிரண்டித்தனமான தாக்குதலில் படுகாயமடைந்துள்ளனா.

சிங்கள பௌத்தர்களின் கட்டுப்பாட்டில் உள்ள ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை சவால்களுக்கு மத்தியில் உண்மையை எடுத்துச் சொன்னவர் ஜோசப் பரராஜசிங்கம். அவரது மறைவால் அனைத்துலக தமிழ்ச்சமூகமும் அச்சமடைந்துள்ளது. மனித விழுமியங்களுடன் கூடிய நேர்மையான ஒரு மனிதரை சர்வதேச சமூகம் இழந்துவிட்டது.

வடக்கு-கிழக்கு மனித உரிமைச் செயலகமான நிசோர் நிறுவன உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மேலும் பொது நலவாய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமைப்பு மற்றும் தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பான சார்க் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமைப்பு ஆகியவற்றின் நிர்வாகக குழு உறுப்பினராகவும் ஜோசப் பரராஜசிங்கம் பணியாற்றியவர்.

அமெரிக்காவின் தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு உலகத் தலைவர்களை ஜோசப் பரராஜசிங்கம் சந்தித்து ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எடுத்து விளக்கியவர் ஜோசப் பரராஜசிங்கம். தமிழர் தாயகப் பகுதிகளில் அமெரிக்க காஙகிரஸ் தலைவர்களில் ஒருவரான டென்னி கே. டேவிஸ் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது அவருடன் ஜோசப் பரராஜசிங்கம் உடன் சென்றவர்.

இந்தப் படுகொலையானது சர்வதேச சமூகத்துடனான தமிழர் உறவை அறுத்தெறியும் ஒரு நடவடிக்கையாகும். ஸ்ரீலங்கா இராணுவத்தின் யுத்தநிறுத்த ஒப்பந்த மீறலகள் நீதிக்கு அப்பாலான படுகொலைகள்,பாலியல் வல்லுறவுப் படுகொலைகள் ஆகியவற்றை சர்வதேச சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்வதற்கான வாய்ப்பை மறுக்கின்ற ஒரு நடவடிக்கையாக இந்தப் படுகொலை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேவாலயத்தின் புனிதத் தன்மையைச் சீர்குலைக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தப் படுகொலை யானது தேவாலயங்களை சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் எரித்ததன் தொடர்ச்சியாக நிகழ்த்தப்பட்டுள்ளது.

இந்தப் படுகொலைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மீது ஸ்ரீலங்க அரசாங்கமும் அதன் பேச்சாளர்களும் சிங்கள ஊடகவியலாளர்களும் குற்றம்சாட்டுவதில் முனைப்புக் காட்டுகின்றனர். ஸ்ரீலங்கா இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் நிகழ்ததப்பட்டிருக்கும் இந்தப் படுகொலை தொடர்பாக எதுவித விசாரணையும் மேற்கொள்ளாமலேயே விடுதலைப் புலிகள் மீது குற்றம் சாட்டுகின்றனர். இது ஸ்ரீலங்கா அரச படைகளால் அல்லது ஸ்ரீலங்கா இராணுவப் புலனாய்வுத் துறையினருடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுக்களால் தான் நிகழ்த்தப்பட்டுள்ளது என்பதைத் தெளிவாக்குகிறது.

இந்தக் கோழைத்தனமான நடவடிக்கை யுத்த நிறுத்த ஒப்பந்த சரத்து 2.1க்கு எதிரானது மட்டுமல்ல யுத்தத்தின் போது பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பாக கூட்டப்பட்ட 4 ஆவது ஜெனிவா மாநாட்டின் சரத்துகளையும் மீறி உள்ளது. இது ஒரு அப்பட்டமான அரச பயங்கரவாதம் என்பது தெள்ளத் தெளிவானது.

இந்தப் படுகொலை தொடர்பில் சர்வதேச சமூகம் எதுவிதக் கருத்தும் வெளியிடாமல் இருப்பது அல்லது செயற்படாமல் இருப்பது எமக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. மக்கள் வாழுமிடங்கள்,வழிபாட்டுத் தலங்கள, பாடசாலைகளிலிருந்து இராணுவம் வெளியேறாதது யுத்த நிறுத்த ஒப்பந்தம் சரத்து 2.2க்கு எதிரானது. இது தொடர்பில் இணைத் தலைமை நாடுகள் கண்ணை மூடிக்கொண்டிருககின்றன.

அதேபோல் ஆயுதக் களைவு தொடர்பாகவும் சர்வதேசம மௌனம் சாதிக்கின்றது. சர்வதேச சமூகத்தின் செயற்பாடுகள் சிங்கள பேரினவாத சக்திகளுக்குச் சார்பாக இருப்பதான தோற்றம் உருவாகி வருகிறது.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் அரச பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவர சர்வதே சமூகம் உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறை பொறுபபாளர் கௌசல்யன், மனித உரிமை செயற்பாட்டாளர் சந்திரநேரு,ஊடகவியலாளர் தராக்கி ஆகியோர் கொல்லப்பட்ட போது சர்வதேச சமூகம் தனது கவலையைத் தெரிவித்தது.

சர்வதேச சமூகமானது ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் இத்தகைய திட்டமிட்ட படுகொலைகளை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் ஸ்ரீலங்கா அரசாங்கம் மீது சர்வதேச தடைவிதிக்க வேண்டும். இதுவே அமைதி முயற்சிகளின் மீது தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் என்று கூறப்பட்டுள்ளது.

உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, இலங்கை தமிழ்ச் சங்கம், உலகத் தமிழர் பெண்கள் அமைப்பு, வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு, பெண்கள் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு மையம்,சர்வதேச தமிழ கலாச்சார மையம், உலகத் தமிழர் அமைப்பு, ஓகியோ தமிழ்ச் சங்கம், தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், கலிபோர்னியா இலங்கைத் தமிழ்ச் சங்கம், வன்கூவர் போர்டலாண்ட் வாசிங்ரன், இலங்கைத் தமிழ்ச்சங்கம், வடகரோலினா இலங்கைத் தமிழ்க் கூட்டமைப்பு, கொலமபியா மாவட்ட தமிழர் நல்வாழ்வு மற்றும் மனித உரிமைகள் குழு ஆகியன இந்தக் கூட்டறிக்கையில் கையெழுத்திட்டுள்ளன. (ர)

# இடமாற்றம்

(மருதங்கேணி)


பருத்தித்துறை விவசாய போதனா ஆசிரியர் வி. பாலசுப்பிரமணியம் யாழ். விவசாய விரிவாக்க அலுவலகத்திற்கு நிர்வாக அதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் முன்பு கரவெட்டி பிரதேச விவசாய போதனாசிரியராகவும் பருத்தித்துறை போதனாசிரியராகவும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ர-35)

## சாயி அருளமுதம்



துருவனுக்கு ஆசி வழங்கியும், கஜேந்திரனை ரட்சித்தும், குசேலரை மீட்டெடுத்தும் பிரஹலாதனுக்குப் பக்கபலம்ாகவும் நின்ற அதே பேரருள், புகலிடமற்றோருக்கு புகலிட்மாகவும், சமாதானம், ஒற்றுமை, தர்மம் ஆகியவற்றின் தெய்வமாகவும், சகல உலகங்களின் இறைவனாகவும் சத்-சித்-ஆனந்த மூர்த்தியாகவும் புட்டபர்த்தி சத்ய சாயி சத்-சக்கரவர்த்தி-ராஜாதி ராஜனாகவும் இவ்வுலகுக்கு வருகை தந்துள்ளார்.


கிளிநொச்சிக்குச் சென்ற மேலக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன், மலையக மக்கள் முன்னணி தலைவர் பெ.சந்திரசேகரன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்துக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவதைப் படங்களில் காணலாம்.

# மாமனிதர் ஜோசப்புக்கு கிளிநொச்சியில் அஞ்சலி

படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்துக்கு; தமிழீழ மற்றும் மலையகத் தலைவர்கள், விடுதலைப் புலிகளின் தளபதிகள், கிளிநொச்சியில் நேற்று மலர் அஞ்சலி செலுத்தினர்.

கிளிநொச்சி வலயக் கல்விப்பணிமனை முன்பிருந்து மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் புகழுடல் முற்பகல் 9 மணி அளவில் போராளிகளின் அணிவகுப்பு மற்றும் அணியிசை என்பவற்றுடன் ஊர்வலமாக கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அங்கு தமிழீழ அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்,வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான், மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன், மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் ஆகியோர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் புகழுடலுக்கு மலர் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினர். பின்னர் அஞ்சலி நிகழ்வும் இடம் பெற்றது. (ச-4)

# மன்னாரில் நேற்றுக் ஹர்த்தால் இயல்புவாழ்க்கை முற்றாகப்பாதிப்பு

மன்னாரில் நேற்று பூரண துக்க தினமும் ஹர்த்தாலும் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் அனைத்துச் செயற்பாடுகளும் முற்றாக செயலிழந்தன. அனைத்துப் போக்குவரத்துக்களும் இடைநிறுத்தப்பட்டன.

அரச அலுவலகங்கள் திறக்கப்படவில்லை. மக்கள் வீட்டை விட்டு வெளியேறவில்லை. இதேவேளை மன்னாரில் அனைத்துப் பகுதியிலும் இராணுவப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டமை, பேசாலையில் சிறுவர் உட்பட நால்வர் எரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டமை, புங்குடுதீவில் யுவதி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டமை என்பவற்றைக் கண்டித்து இக்ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. (ச-9)

## சமாதான முயற்சியில்...

இந்தியா மேலதிக பங்களிப்பினை ஆற்ற வேண்டும் என ஜனாதிபதி மகிந்த இந்தியப் பிரதமரிடம் கேட்டுக் கொண்டார். அமைதி நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள சிக்கலான சூழ்நிலை குறித்தும் ஜனாதிபதி விபரித்துள்ளார்.

அதே நேரம் யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு வலுச்சேர்க்க, சமாதானப் பேச்சு வார்த்தைக்கு வலுச்சேர்க்க இரு தலைவர்களும் வலியுறுத்தியுள்ளனர்.

இந்திய குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் ஜனாதிபதி மகிந்தவுக்கு இரவு விருந்தளித்தார். இந்தியாவின் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் சோனியாகாந்தி மற்றும் மூத்த அமைச்சர்களையும் மரியாதை நிமித்தம் ஜனாதிபதி சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதேவேளை நாளைய தினம் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்திக்கும் நிகழ்ச்சி பாதுகாப்புக் காரணங்களுக்காக இரத்துச் செய்யப்பட்டுள்ளது. (ச-4)

# கிரனைட் வீச்சு

யாழ்.ஈ.பி.டி.பி அலுவலகத்துக்கு பின்னால் உள்ள இராணுவக் காவலரண் மீது நேற்றிரவு 7 மணியளவில் கிரனைட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அடுத்தடுத்து இரண்டு குண்டுகள் வீசப்பட்டுள்ளன. இதன்போது எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் கிரனைட் தாக்குதல் மேற்கொண்டவர்களை தாம் கைது செய்துள்ளதாகவும் இராணுவம் தெரிவித்துள்ளது. (ச)

## உடனடியாக...

கொல்லப்பட்டுள்ளனர்.

அண்மைய வன்முறைகள் குறித்து நாம் மிகுந்த கவலை கொள்கின்றோம். இந்த வன்முறைகளால் ஒட்டுமொத்த அமைதி முயற்சிகளுமே சிக்கலாகியுள்ளன.

அதிக அளவில் வன்முறைகளும் உயிரிழப்புக்களும் அதிகரித்து வருவது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை சிக்கலாக்கியிருப்பதுடன் அடுத்தகட்ட அமைதி முயற்சிகளையும் கடினமாக்கியுள்ளது.

யுத்தநிறுத்த அமுலாக்க பேச்சுகளுக்கான இடம் தொடர்பாக அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் நீண்டகாலம் விவாதித்து வருவதை கைவிட்டுவிட்டு யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை பாதுகாக்க உடனடி நேரடிப் பேச்சுக்களை நடத்த முன்வர வேண்டும்.

நோர்வேயைப் பொறுத்தவரை பேச்சுக்கான இடம் எதுவென்பது முக்கியமல்ல. அண்மைக்காலமாக அதிகரித்து வரும் வன்முறைச் சூழலில் யுத்த நிறுத்த அமுலாக்கம் தொடர்பான பேச்சுக்களை எவ்வளவு விரைவாக நடத்த முடிமோ அவ்வளவு விரைவாக நடத்துவதுதான் எமக்கு முக்கியமானதாக கருதுகிறோம். இனியும் காலதாமதம் செய்யக் கூடாது என்று எரிக் சொல்ஹெய்ம் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ச-4, 8)

# படையினரால் எரிப்பு

நெல்லியடிப்பகுதியில் உள்ள வீடியோக் கடைகள் அனைத்தும் நேற்று மாலை படையினரால் சோதனை மேற்கொள்ளப்பட்டது.அங்கு இருந்த விடுதலைப் புலிகளின் பாடல் கெசற்றுக்கள், வீடியோ நாடாக்கள், சி.டிகள் என்பன படையினரால் பறிமுதல் செய்யப்பட்டு தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. புலிகளின் பாடல்கள், திரைப் படங்கள் அடங்கிய கெசற்றுக்களை வைத்திருப்பவர்கள் இனிமேல் தண்டனைக்குட்படுத்தப்படுவார்கள் என படையினர் எச்சரித்துள்ளனர். (ச-109)

# புன்னாலைக்கட்டுவனில் நேற்று கைக்குண்டு வீச்சு

புன்னாலைக்கட்டுவன் குப்பிளான் பகுதியில் நேற்று மாலை இடம் பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் 2 படையினர் காயமடைந்துள்ளனர். நேற்று மாலை 4 மணிக்கு இடம் பெற்ற கைக்குண்டுத் தாக்குதலிலேயே இவ்விரு படையினரும் காயமடைந்துள்ளனர்.

தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த இரண்டு படையினரும் பலாலிஇராணுவ வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இத்தாக்குதல் சம்பவத்தையடுத்து அப் பகுதியில் படையினர் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தியுள்ளனர். இதேவேளை உரும்பிராய்ப் பகுதியிலும் படையினர் மீது கைக்குண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் படை வீரர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். (ச-8)

# கொந்தளிக்கும் மக்களை அமைதிப்...

சிங்கள இனவாதிகளும் சிங்கள இனவாதிகளின் அடிவருடிகளும் தமிழ்த் தேசியத்தை அதன் இயற்கையை அதன் வலிமையை சிதைப்பதற்கும் பலவீனப்படுத்துவதற்கும் இன்று கங்கணம்கட்டி செயற்பட்டுக் கொண்டு இருப்பதன் வெளிப்பாடுகள்தான் எங்கள் பாசத்துக்குரிய தலைவர்களை, செயற்பாட்டாளர்களை, புத்திஜீவிகளை, மக்களை அழிப்பதன் வெளிப்பாடு.

மிகக் கோழைத்தனமான முறையில் ஜோசப் ஐயா படுகொலை செய்யப்பட்டுள்ளார். உலகம் போற்றுகின்ற நன்நாளில் தனது இனத்தின் அமைதிக்காகவும் கௌரவத்துக்காகவும் ஆராதனையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது தேவாலயத்துக்குள் வைத்து மிகக் கோழைத்தனமாக சுட்டுப் படுகொலை செய்துள்ளனர்.

தற்போது கொந்தளித்த நிலையில் இருக்கின்ற எமது மக்களை மேலும் கொந்தளிக்க வைக்கின்ற நிகழ்வாகவே ஜோசப் ஐயா அவர்களின் படுகொலை அமைந்துள்ளது.

கொந்தளித்துக்கொண்டிருக்கின்ற சமுத்திரம் போன்ற மக்களை மேலும் கொந்தளிக்க வைக்கும் நிலையினை உருவாக்க சிங்கள இனவாதிகள் தமது கைக்கூலிகள் மூலமாக படுகொலையினை செய்து வருகின்றனர்.

சிங்கள இனவாதிகள் படுகொலைகளை செய்துவிட்டு இதனை மூடி மறைக்கும் வகையில் அனுதாப அறிக்கைகளை விடுத்த வண்ணம் உள்ளார்கள்.

தமிழ் தேசியம் விழுது விட்டு விருட்சமாக வளர்ந்து நிற்கின்றது. தமிழ் தேசியத்தை அழிப்பதற்கு, சிதைப்பதற்கு எடுக்கின்ற முயற்சிகள் திரும்பி அவர்களையே சென்றடையும்.ஒருபோதும்தமிழ் தேசியத்தை எவராலும் அழிக்க முடியாது. இன்று தமிழினம் ஒன்று பட்டு பெரும் பலத்தோடு நிற்கின்றது. தமிழ் இனத்தின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளுங்கள் தமிழினத்தை கொந்தளிக்கச் செய்து அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு முகம் கொடுத்த வண்ணம் உள்ளீர்கள். இராணுவம் பெருமளவில் கொல்லப்படுவதாக இருந்தால் அது புலிகளால் மட்டும் தான்முடியும்என்று குற்றஞ்சாட்டுகின்றீர்கள்.

உண்மையில் போர்நிறுத்த உடன்பாட்டில் கையெழுத்திட்டுவிட்டு அதற்கு உயர்ந்த மதிப்பை கொடுத்து தமிழீழ விடுதலைப்புலிகள் தம்மைக் கட்டுப்படுத்திவைக்கின்ற சூழலில், மக்களின் ஜனநாயக வழிப் போராட்டங்களை இராணுவ வன் முறை கொண்டு அடக்கும் சூழலில், மக்கள் கொந்தளித்து மக்களே திருப்பித் தாக்குகின்ற சூழலை உருவாக்கியிருக்கின்றீர்கள்.

அதனுடைய விளைவுகளை தமிழர் தாயகத்தில் அனுபவிக்கின்றீர்கள். எமது மக்கள் கேட்பதெல்லாம் காலம் காலமாக வாழ்ந்த பூர்வீக மண்ணில் எந்த நெருக்கடிகளும் இல்லாமல் வாழ வேண்டும் என்ற கோரிக்கையைத்தான்.

அண்மையில் கூட எமது சகோதரி ஒருவர் கடத்தப்பட்டு இரவிரவாக சிங்கள காடையர்களால் குதறப்பட்டு கொலை செய்யப்பட்ட நிகழ்வு தமிழ் மக்களை கொந்தளிக்கும் நிலைக்குத் தள்ளி விட்டது.

ஜனநாயக வழியில் பல்கலைக்கழக சமூகம் முன்னெடுத்த போராட்டம் இராணுவம் கொண்டு அடக்கப்பட்டதுடன் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

இதனுடைய விளைவாகத்தான் தமிழர் தாயகம் அனைத்திலும் ஒரு கொந்தளிப்பான சூழலை உருவாக்கிவிட்டது. எனவே சர்வதேச சமூகத்திடம் கேட்கிறோம். சிறிலங்கா அரசாங்கத்தின் அடாவடித்தனத்தை முடிவுக்கு கொண்டுவர முழு அழுத்தத்தையும் பிரயோகியுங்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் மீது குற்றஞ்சாட்டும் செயலை சர்வதேச சமூகம் கண்டிக்க வேண்டும்.

தமிழ் மக்களை அமைதிப்படுத்த வேண்டுமாக இருந்தால் ஆக்கிரமிப்பு இராணுவம் மக்கள் மீது கட்டவிழ்த்து இருக்கின்ற வன்முறையை நிறுத்துவதே ஒரே வழி.

இதற்கு சர்வதேச சமூகம் முழுஅழுத்தத்தை சிறிலங்கா அரசுக்கு கொடுக்க வேண்டும்.

ஜோசப் ஐயாவின் இழப்பு என்பது ஈடுசெய்யமுடியாத இழப்பாக உள்ளது. தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் ஜோசப் ஐயாவுக்கு மாமனிதர் விருது வழங்கி கௌரவித்துள்ளார்.

தமிழ் தேசி யத்தைச் சிதைக்கின்ற சக்திகளுக்கு ஜோசப் ஐயா இடம் கொடுக்காமல் துணிவுடன் தமிழ்த் தேசியத்திற்காக செயற்பட்டவர் என்றார் சு.ப.தமிழ்ச்செல்வன். (ச-4;8)










இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.12.2005 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.